# சித்தூர் போராட்டம்

A. L. C. கிருட்ணசாமி

289




289
3-84
V21622
N54
113493

# சித்தூர் போராட்டம்

A. L. C. கிருட்ணசாமி

கலைமன்றம்
சென்னை-1

வெளியீடு: 132
முதற் பதிப்பு: ஜூலை 1954
உரிமை உடையது

விலை அணு 0—8—0

விற்பனை நிலையம்
**M. S. ராமுலு கம்பெனி**
286, சைனு பஜார், சென்னை-1

# பதிப்புரை

சித்தூர் ஏன் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற சிறந்த விளக்கத்துடன் வெளிவருகிறது இந்நூல். இதில் சித்தூர் மாவட்டத்தின் வரலாற்றைச் சரித்திர சான்றுகளுடனும், கல்வெட்டுகளின் மூலமாகவும் கண்டறிந்து, திராவிடர்களுக்கு அளிக்கின்றார் தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி அவர்கள். இந்நூல் இன்றைக்கு மிகமிகத் தேவையானது என்பதால் இதனை வெளியிடுகின்றோம். எப்போதும் போல திராவிடம் ஏற்று போற்றும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்

**கலைமன்றத்தார்**

# முகவுரை

சித்தூர் மாவட்டமும் அதன் சுற்றுப்புற கிராமங்களும் எங்களைச் சேர்ந்ததே. அதை தமிழகத்தோடு சேர்க்க மாட்டோம் என்றும், அங்கு வாழும் மக்கள் பண்பு, பழக்க வழக்கங்கள், கொள்கை, கோட்பாடு ஆந்திரரைப் பின் பற்றியிருப்பதாகக்கூறி வளர்ந்து வரும் உரிமைக் கிளர்ச்சியை அடக்கிவிட முயற்சிக்கிறுர்கள் ஆந்திரத் தலைவர்கள்.

சித்தூரும் அதன் சுற்றிப்புற தமிழ் பகுதிகளும் தமிழகத்தோடுதான் சேரவேண்டும், என்ற நம் தணியாத ஆசை மட்டுமல்ல, இந்நூலில் தந்துள்ள சரித்திரச் சான்றுகள், அரசாங்கத்தின் அத்தாட்சி இவை அத்தனையும், நம் நியாய மான, கோரிக்கைக்கு நற்சாட்சி டளிப்பதாக உள்ளது. இப் பகுதிகளை எந்த விதத்திலும் ஆந்திரத்துடன் சேர்ப்பதற் கில்லை என்ற அதிகார ஆதார பூர்வமான சில சான்றுகள் இந்நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடந்த திருத்தணி போராட்டத்தில் நாம் செய்த அரும்பணி, தொண்டு, இவை அத்தனையும், மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

திருத்தணி போராட்டத்தில் தி. மு. க. கலந்து கொள்ள வில்லை என்று கூறும் சிறுமதியாளர்கள் இந்நூலைப் படித்துத் தெளிவு பெறுவார்கள் என்பது நமது திடமான எண்ணம்.

நமது கழகத் தோழர்கள் இந்த அரிய விளக்கத்தைப் படித்து பயன் பெறுவார்கள் என்ற நோக்கத்தோடு இதனை வெளியிடுகிறேன். வாசகர்கள் இதனை உற்சாகத்துடன் வர வேற்பார்கள் என்பதில் சிறிதும், ஐயமில்லை.

அரக்கோணம், 1—7—54.

அன்பன்,
ஏ. எல். சி. கிருட்ணசாமி.

# சித்தூர் போராட்டம்

## எது தமிழகம்

பண்டைய பொன்மொழிகள். இலக்கணம் கூறும் தமிழ் நாட்டின் நாற்புற எல்லே.

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து,
வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி.

—தொல்காப்பியம், பனம்பாரனர்.

குணகடல் குமரி குடகம் வேங்கடம் எனும் நான் கெல்லேயின் இருந்தமிழ்க் கடலுள்.

—நன்னூல் பவணந்தி முனிவர்

வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்
என்றின் நான்கெல்லே தமிழது வழக்கே.

—சிகண்டி முனிவர்.

## இலக்கியம்

குமரி வேங்கடம் குணகுட கடலாம்
மண்திணி மருங்கில் தண் தமிழ் வரைப்பில்,
நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்!
தமிழ்வரம் பறுத்த தண் புனல் நன்னட்டு!

—சிலப்பதிகாரம்.

## தொண்டை நாட்டெல்லை

மேற்குப் பவளமலை. வேங்கடம் நேர் வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு—பார்க்குளயர்.
தெற்குப்பிணுகி திகழ் இருபதின் காதம்
நற்ளெண்டை நாடெனவே நாட்டு.

கம்ப நாடர்.

கயிலையும் கச்சியும் விற் கோலம் முதற்
கழுக்குன்றமும் பயில் வலி தாயமும்
பாச்சூரும், அச்சிறு பாக்கம், நல்வயிலையும்.
வல்லம் திருவெற்றியூரும், அரசிலியும்
மயிலையும் ஈசன் மகிழ்ந்த தன்றே
தொண்டை மண்டலமே!

—தொண்டை மண்டல சதகம்—படிக்காசுப் புலவர்

தமிழ்த் தொண்டை நாட்டுக் கோட்டங்கள் 24
இவற்றுள் வேங்கடமும் ஒன்றே.
கிருஷ்ணதேவ ராயர்காலத்து முதல் மந்திரியாக இருந்த
அம்பி அறம் வளர்த்தான் முதலியார் வகுத்தது.

## செய்யுள்

அழகுறு மேழிக்கொடியார் தொண்டை மண்டலத்தார்
அருள்ஞானப் பிரகாசம்

—அடியார் கோட்டம்.

புழல், புலியூர், ஈக்காடு, மணவூர், செங்காடு, புகழ் பையூர், எயில், தாமல், புனல் ஊற்றுக்காடு, விழை வுறு களத்தூர், செம்பூர், ஆமூர், ஈதூர், வெண்குன்றம், பல் குன்றம், இலங்காடு, படுவூர், தழைசோலைக் கலியூர் சிறு காரை, கடிகை, சந்திரிகை, குன்றபத்திரம், வேங்கடம், வேலூரே.

## சரித்திரம்

அரசாங்கத்தார் சென்னை மாகாணத்தைச் செய்துள்ள பாகுபாடு.

## மத்தியதமிழ் மாவட்டங்கள்

மதுரை, திருச்சிராப்பள்ளி, நீலகிரி, சேலம், கோயம் பத்தூர், வட ஆற்காடு, சித்தூர்.

## கர்னுடக மாவட்டங்கள்

சென்னைப் பட்டினம் செங்கற்பட்டு, தென்னுற்காடு, நெல்லூர் என்பன.

குறிப்பு:—சித்தூரும், நெல்லூரும் தமிழ் நாட்டோடு சேர்ந்துள்ளன என்பதை அறிக.

# கல்வெட்டுகள்

### சந்திரகிரி

சந்திரகிரியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் 4. அவை நான்கும் தமிழே.

### திருப்பதி

அவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் மொத்தம் 38. அவற்றுள் தெலுங்கு 1. சமஸ்கிருதம் 1. தமிழும் கிரந்தமும் கலந்தவை 9. தமிழ். 69.

### தொண்டை நாடு

இவ்வூர்காளத்திக்கு அருகில் உள்ளது இங்குள்ள கோதண்டராமசாமி கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஆலயப் பரிபாலனம் செய்வதற்காக மதுரை கொண்ட பரகேசரிவர்ம சோழ மன்னன், பொருளும் பூதானங்களும் கொடுத்ததாக எழுதப்பட்டு உள்ளது.

## திருச்சானூர்

இவ்வூரில் உள்ள கல்வெட்டுகள் 5. அவை யாவும் தமிழே.

## நெல்லூர்

இவ்வூர் அரங்கநாதர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் யாவும் தமிழே.

## புராணம்

தொண்டை நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் 42. அவற்றுள் ஒன்று சீகாளத்தி. தொண்டை நாட்டில் உள்ள விஷ்ணு ஸ்தலங்கள் 24. அவற்றுள் ஒன்று திருவேங்கட மலே.

தணிகைமலே, வள்ளிமலே, காளத்தி, வேங்கட மலே ஆகிய நான்கு கோயில்களும் தமிழருக்கு உரிமையானவை. வேங்கடத்தான் கோவிலில் நடக்கும் பூசைச் சிறப்பெல்லாம் தமிழ் மாதக் கணக்கின்படி நடக்கின்றன.

## இயற்கை அமைப்பு

சித்தூர் மாவட்டத்தின் இயற்கை யமைப்பானது மாவட்டத்தின் தெற்கு எல்லே விரிந்த நிலப் பரப்பையும், வடக்கு எல்லே தொடர்ந்த மலேத் தொடராகவும், அமைந்துள்ளது. இங்கு உள்ள மக்கள் தென்னுட்டோடு பலவகையில் தாராளமாகக் கலக்க இயற்கை வசதியளித்துள்ளது. ஆனல் வட நாட்டோடு கலக்க ஒட்டாமல் மலேகளின் இயற்கை தடுக்கின்றது. இந்த மாவட்டம் உண்டாவதற்கு முன மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்களோ அவ்வாறே இன்றும் வாழ்ந்து வருகின்ருர்கள்.

இந்த மாவட்டத்திலுள்ள முக்கிய நகரமான சித்தூரானது வேலூரை நம்பி வாழ்கிறது. இந்த மாவட்டமுழுவதும் பலவகையில் சென்னே நகரத்தோடு இணைக்கப் பட்டுள்ளது.

## ஊரும் நகரமும்

சித்தூர் மாவட்டத்திலுள்ள, புங்கனூர், மதனப்பல்லி வாயல்பாடி, பல்லவனேரி தாலுக்காக்கள் நீங்கலாக, மற்ற இடங்களிலெல்லாம் தமிழர்களும், தெலுங்கரும் இரண்டறக் கலந்தே வாழ்கின்றனர். நூற்றுக்கு மேலான தமிழர் வாழ் ஊர்கள் இருக்கின்றன. அவை சீரமைப்பிலும் பண்டைய கலாசாரத்திலும் சிறந்து தமிழ்நாட்டின் பண்பாட்டை இன்றும் விளக்கிக் கொண்டிருக்கின்றன.



தோழர் ஏ. முனுசாமி

## வாழும் மக்கள்

இந்த மாவட்டத்தில் வாழும் தமிழர்கள். வேளாளர், செங்குந்தர், வன்னியர், வாணியர், ஆதித்திராவிடர் முதலிய வகையினர், தெலுங்கர்கள், கம்மவார் நாயுடுக்கள், வலம ரெட்டியார்கள, பலிஜ நாயுடுக்கள், இராஜாக்கள்,யாதவர்கள், ரெட்டிகள முதலியோராவர். இங்கு வாழும் தமிழ்

தெலுங்கு மக்கள் எல்லோரும் சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு முதலிய மாவட்டங்களோடு குலத்தொடர்பு உடையவர்கள். இவர்களுக்குத் திருப்ப திக்கு வடக்கே யாதொரு தொடர்பும் இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலே வாழுபவர்கள் தமிழ் நாட்டினரே என் பதில் ஐயமில்லை.

## ஜனத்தொகை

கடப்பை மாவட்டத்தினின்று சேர்க்கப்பட்ட பெரிய தாலுக்காவான மதனப்பல்லியோடு வாயல்பாடியும் தெலுங்கு மக்களேவாழும் தாலுக்காகள் ஆகும்.

இவைகளின் ஜனத்தொகையை ஏனைய சித்தூரில் வாழும் தெலுங்கு மக்களோடு சேர்த்துக்காட்டி, சித்தூர் மாவட்டத்தில் தெலுங்கரே அதிகம் என்று கூறுவது தந் திரக் கணக்காகும், தமிழர் வேண்டுவதெல்லாம், தங்கள் உரிமைகொண்ட வடாற்காட்டின் சித்தூர்மாவட்டமேயாகும் இப்பகுதியின் கிராமங்களில்வாழும் தெலுங்கர்கள் எல்லோ ரும் பயிர்த் தொழிலை முக்கியமாகக் கொண்டவர்கள்.

இவர்கள் தொழிலுக்குத் துணையாக வேலை செய்யும் ஆதித் திராவிடர் (பழந்தமிழர்) தெலுங்கர் ஊரையடுத்து ஊர் ஊராக வாழ்கின்றனர். இவ்விரு வகையினரின் ஈடு கொண்ட ஜனத்தொகையில் ஆதித் திராவிடர் தொகை சிறிது குறைவு என்று கொண்டாலும், பயிர்த் தொழிலும், நெசவுத் தொழிலும் செய்யும் தமிழரே வாழும் பல ஊர் களும், அவற்றை யடுத்துவாழும் பழந்தமிழர் சேரிகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன. நகரங்களிலெல்லாம் தமிழர் களே முக்கால் பகுதியினராக வாழ்கின்றனர். இந்த வகை யில் நோக்கின் சித்தூர் மாவட்டத்தின் ஜனத்தொகையின் தமிழர்களே அதிகமாக இருக்கிறார்கள் என்பது திண்ணம்.

நமது தமிழ் இலக்கண இலக்கிய ஆசிரியர்கள், கவி ஞர்கள், புலவர்கள், மன்னர்கள் முன்னமே நமது நாட்

டிற்கு எல்லை வகுத்துச் சென்றார்கள். அதுவரை ஆட்சி புரிய நமக்கு உரிமையுண்டு. அவர்கள் வகுத்துத் தந்த எல்லைகளுள் வேங்கடமும் ஒன்று.

## நாட்டுப் பிரிவினை

நாட்டுப் பிரிவினைக்கும், நாட்டுக்குள் மாவட்டப் பிரிவினருக்கும் எல்லை வகுப்பதில் வேற்றுமையுண்டு. மாவட்



தோழர் எஸ். ஏ. ரசீத்

டப் பிரிவினைக்கு நமது வசதியானவிடத்தில் எல்லைக் "கல்" நட்டுவிடலாம். ஆனால் நாட்டுப் பிரிவினைக்கு அப்படியன்று. இயற்கையான பெரிய ஆறு, அல்லது மலை எல்லையாக இருத்தல் வேண்டும் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

மணி நீரும் மண்ணும் மலையும் அணி நிழற்
காடும் உடையது அரண்!! —குறள்

விரிவான ஆறு ஒன்றும் சித்தூர் மாவட்டத்திலில்லை. மலையையே எல்லையாக்கிப் பிரிப்பது நிலைப்பானது. ஆதலின் திருவேங்கடமலையே தமிழ் நாடு, ஆந்திர நாடெனப் பிரிப்பதற்கு இயற்கையான எல்லைச் சுவராகும்.

## தமிழர்கள் அதிகமாக வாழுமிடங்கள்

திருத்தணி, புத்தூர், சித்தூர், கங்குந்திஜமீன் பகுதிகளாகும். மற்றப் பகுதிகளான, புங்கனூர், மதனப்பல்லி, பல்லவன்ஏரி, வாயல்பாடி, சந்திரகிரி, காளத்தி ஜமீன்களில் பெரும்யாலும் தெலுங்கு மொழி பேசுகின்றவர்களே அதிகமாகும். இந்தச் சூழ்நிலையை உள்ளடக்கியதுதான் சித்தூர் மாவட்டமாகும்.

## சித்தூர் மாவட்டம் எப்படி தோன்றியது?

ஒண்டிப்பிழைக்க ஆங்கிலேயர்கள் வந்தவர்கள் ஊராள்வோராக ஆக்கப்பட்டார்கள். அந்த நாசகாலர்கள் இந்த நாட்டை ஆண்டிருந்த 200 ஆண்டுகளில் இந்த நாட்டிற்கு விளைவித்த பலகேடுகளில் ஒன்றுதான் சித்தூர் மாவட்டம்.

ஆங்கிலேய ஏகாதிபத்திய தாசர்களால் மாவட்டந்தோறும் தலைமை அலுவலகங்களை ஆட்சி செலுத்திய ஐ. சி. எஸ். (**I. C. S.**) பட்டம்பெற்ற மாவட்ட அதிகாரியால் (District collector) **1911**-ம் ஆண்டு உண்டாக்கப்பட்டதே சித்தூர் மாவட்டம்.

**1911**-ம் ஆண்டிற்குமுன் சிறந்த தமிழ் நகரமாக, தமிழர்களின் சிந்தை குளிரும் நகரமான சித்தூர், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு அங்கமாக இருந்த சித்தூர், வட ஆற்காடு மாவட்ட அதிகாரியின் ஆதிக்கத்திலிருந்தது சித்தூர்.

அன்று சிந்தைக் குளிர்ந்திருந்த மக்கள் இன்று சீரழியக் காரணமென்ன? அன்று சென்னையோடு சேர்ந்திருந்த மக்கள் இன்று ஆந்திரா ஆதிக்கத்தி லிருப்பானேன்?

வட ஆற்காடு மாவட்டத்தில் சிறிய வட்டமாக இருந்த சித்தூர் எப்படி ஒரு தனி மாவட்டமாக மாறிற்று? ஏன் எப்படி என்ற கேள்விகளுக்கெல்லாம் ஒரே ஒரு பதில்தான் நம்மால் தரமுடிகிறது. அரசியல் அதிகாரத்தைக் காட்டி ஆங்கிலேயனும், ஆத்மீக பயத்தைக் காட்டி ஆரியனும், சேர்ந்து கூட்டுக்கொள்ளை அடித்த அந்நாளில் செய்த படுபாதகச் செயலால் விளக்கம் நூலின் பிற்பகுதியில் தரப்பட்டுள்ளது.



**14—5—53** மறியலுக்கு ஆக்கந் தந்தவர்கள்.
**1.** தோழர் ஏ. எல். சி. பக்தவத்சலு, **2.** தோழர் வி. ஆறுமுகம்,
**3.** தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி

## சுயநலத்திற்காக உண்டாக்கப்பட்டது சித்தூர் மாவட்டம்

வெள்ளையன் ஆட்சியின்போது ஆங்கிலேயர் மட்டும் நாட்டைச் சுரண்டவில்லை.

அவர்களோடு சில கொள்ளையர்களும் பங்கேற்றனர்.

1911-ல் காங்கிரஸ் உரிமைக்கிளர்ச்சி வளர்ந்துக் கொண்டு வந்தாலும் வெள்ளையர்களை ஆதரித்து ஆராத்தி கூறும் சுயநலமிகளும் இல்லாமலில்லை. அத்தகைய தாசானு தாசர்களுக்கு சலுகைக்காட்ட வேண்டியது ஆளும் வர்க்கத் தினரின் கடமையாக இருந்தது. தான் வளரவும் தன் சுய நலங்கருதியும், தேவையில்லாத இலாக்காக்களை உண்டாக்கி அந்த இலாக்காக்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்சம்பளத் தில் உயர்பதவி தருவதும், வெள்ளையர் காலத்தில் சகஜமாக இருந்தது. பிறருக்கு உயர்பதவி அளிப்பதின்மூலம் தன் ஏகாதிபத்தியத்தை வளர்த்துக் கொள்ளச் செய்த சூழ்ச்சி களில் ஒன்றே சித்தூர் மாவட்ட தோற்றத்திற்கே காரணம்.

வட ஆற்காடு மாவட்டத்தின் வடக்கு, வடமேற்கு பகுதிகளிலே இருந்தது சித்தூர்.

காளத்தி, புத்தூர், திருத்தணி, சந்திரகிரி, பல்லவனேரி ஆகிய ஆறு வட்டங்கள். கடப்பை மாவட்டத்தைச் சேர்ந்த பீலேர், மதனபல்லி, புங்கனூர் ஜமீன் ஆகிய மூன்று வட் டங்களும், நெல்லூர் மாவட்டத்தைச் சேர்ந்த வாயல்பாடி வட்டமும், ஆகிய பத்து வட்டங்களை ஒன்றுக்கி மத்தியி லிருந்த சித்தூர் வட்டத்தைத் தலைநகராக்கிக்கொண்ட "சித்தூர் மாவட்டம்" 1911-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 22-ம் தேதி நிறுவப்பட்டது. நிர்வாக வசதி என்ற பெய ரால், (Ad—Con)? (இம்பிரீயல் கெஜட் ஆப் இந்தியா வால்யூம். நம்பர் 2-ல் இது இருமொழிகலந்த பிரதேசம்) என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சித்தூர் மாவட்டம் ஆந்திர நாட்டுக்குப் போனதேன்?

வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து சித்தூரை தனி மாவட்டமாக பிரித்தது. ஆங்கிலேயர் என்றாலும், பிரித்த

மாவட்டம் எப்படி ஆந்திரத்தோடு சேர்ந்தது என்பதை ஆராய்வோம். நான் முதலில் குறிப்பிட்டேன் வெள்ளைய னும், ஆரியனும் செய்த சூழ்ச்சி என்று. பின்னையது ஆரி யன் சூழ்ச்சி, இந்த நாட்டிற்கு விடுதலை வாங்கித்தருவதற் காக அமைக்கப்பட்ட காங்கிரஸ் அந்த நாட்களிலே காட்டிய அலட்சியம், சுயநலம், சூழ்ச்சி, இவையாவும், சேர்ந்துதான் 1928-ம் ஆண்டு தமிழகத்தின் வரலாற்றையே துண்டிக்கத் துணிந்தது. என்று கூறலாம்.

வெள்ளையர்களின் பெயரைச் சொல்லிக்கொண்டு விளம் பரமாகிக்கொண்டு வந்த கொள்ளையர்கள காலத்திலேதான் ஆந்திர மண்டலத்தில் ஒன்றாக சித்தூர் மாவட்டத்தையு மிணைத்துவிட்டார்கள். 1928-ம் ஆண்டில் மொழி வழி மாகாணங்கள் என்ற போர்வையில் ஆரம்பிக்கப்பட்ட தனித் தனி காங்கிரஸ் மண்டலங்கள். அமைப்புக் குழுவிலே அங் கம் வகித்த அந்த நாள் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர்கள் செய்த பெருஞ் சதிதான் இன்று நாலரை லட்சம் தமிழர்க ளின் நல் வாழ்வை நாசமாக்கி யிருக்கிறது. எங்கெங்கே வட நாட்டு ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முன் வந்தார்களோ? அந்தப் பகுதி மக்களை எல்லாம் இப்படித்தான் சிதைத்து விட்டார்கள். அந்த பகுதி மக்கள்மீது இவர்கள் ஆதிக்கம் பழிதீர்த் துக்கொண்ட தென்றே கூறவேண்டும். சரித்திர உண்மை யைச் சிந்திக்கத் தெரிந்த யாரும் இதனை மறுத்துக் கூற மாட்டார்கள் என்றே கருதுகின்றோம். ஆரியம், நம்மவர்களை பழிதீர்த்துக்கொள்வது இன்று நேற்றல்ல சரித்திரம் தோன்றிய நாள் முதல் இவர்கள் சூழச்சியும் தோன்றிற்று. வீரசிவாஜியை வீழ்த்தி, சந்திரகுப்தனைச் சாய்த்து, நவநந்தர் களை நாசமாக்கி, நாளாந்தாவை நடுநிசியிலே கொளுத்தி, பரஞ் சோதியை பண்டாரமாக்கி, எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றி, சோழ வம்சத்தையே கோழைகளாக்கி, தரணி போற்றிய தஞ்சை அ சர்களை பங்கமுறச் செய்து, களம்பல கண்டவர்களை காஷாயம் உடுக்கச் செய்து, கோட்டைகளை தகர்த்து, கோபுரங்களை, எழுப்பி, வேதங்களைக் கோஷங்க

ளாக்கி, இன்று காமராசரின் கண்ணியத்தைக் கெடுத்து, பக்தவத்சலத்தை பவனி வரச்செய்து, மாணிக்கவேலரை மக்கள் துரோகியாக்கி, விநாயகத்தை விபீஷணனாக்கிய ஆரியம் தான். சித்தூர் தமிழர்களின் வாழ்வையும் சீரழித்து இருக்கிறது. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களிலே மிக முக்கிய மானவர் காலஞ்சென்ற தோழர். சத்தியமூர்த்தி அய்யர், அவர்கள், அந்த நாட்களில், சென்னை மாநிலத்திலேயே அபரிமிதமான மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்தது. "நீதிக் கட்சி" (Justice Party) அய்யருக்கு நேரடியாய்ப்படு தோல்வியை உண்டு பண்ணி வந்த நீதிக்கட்சிக்குத் தலைமை வகித்தவர்கள், தமிழ் மொழியினரை விட தெலுங்கு மொழியினரே அதிகமாகும். நீதிக் கட்சியினர் செல்வாக்கின்மீது அய்யருக்கு ஏற்பட்டிருந்த அளவுகடந்த வெறுப்புதான் இன்றைய ஆந்திர மாநிலத்திலே சிதையுண்டு கிடைக்கும் சித்தூர் மாவட்ட மென்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இப்படிக் கூறுவதால் சத்தியமூர்த்தி அய்யரையோ? அல்லது அவர் தியாகத்தையோ? நாம் குறை கூறுவதாக யாரும் நினைத்துக்கொள்ள வேண்டாம். அவர் கொண்டிருந்த தவறான எண்ணம் இல்லை, பழிவாங்கும் குரோதத் தன்மை எத்தகையது என்று எடுத்துக் காட்டவேயாகும்.

## சித்தூர் மாவட்டமும் நீதிக் கட்சியும்

சித்தூர் மாவட்டத்தி லிருந்துதான் சிறப்புவாய்ந்த பல நல்லறிஞர்களைப் பெற்றிருந்தது, நீதிக்கட்சி. மதிப்பிற்குரிய இன்றைய இந்தியத் துணைக்கண்டத்தின் துணைத்தலைவர் டாக்டர் S. ராதா கிருஷ்ணன், பல்கலைக் கழகத் துணை வேந்தர், காலஞ்சென்ற அறிஞர். C. R. ரெட்டியார், முன்னாள் முதலமைச்சர்களான திருவாளர்கள் பானக்கல் அரசர் திவான் பகதூர் பொல்லினி முனுசாமி நாயுடு, திவான் பகதூர் ரகுநாத ரெட்டியார் (சித்தூர் மாவட்ட ஆட்சிமன்றத்தின் தலைவராக இருந்தவர்) இவர்கள் முன்னே தம்மால் செல்வாக்குப் பெறமுடியாது என்று அவர் கொண்ட தவ

முன எண்ணத்தால் அய்யர் 1000 வருடம் இருக்கப் போகிறோம் என்று நினைத்து இந்தப் படுபாதகச் செயலைத் துணிந்து செய்து நாலரை லட்சம் தமிழர்களின் நல் வாழ்வை நாதியற்றதாக்கி விட்டார்.

1928-ம் ஆண்டிலே மொழி வழி காங்கிரஸ் மண்டலங்கள் அமைப்புக் குழுவின் தூதுவராக மேலிடத்தவரால் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் அமர்த்தப்பட்டார். அந்த அமைப்புக் குழுவின் தூதுவராக திரு சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் திருத்தணிக்கு வந்தார். "மொழி வழி காங்கிரஸ் மண்டலப் பிரிவினை" கூட்டம் அவர்கள் மொழியால் காங்கிரஸ் மகாசபை ஒன்றை அய்யர் அவர்கள் கூட்டினர். திறந்த வெளியிலல்ல, ஒரு நாடகக் கொட்டகையில் அந்தக் கூட்டத்திலே பேசிய சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சகோதரர்களே! மகாஜனங்களே! நாமெல்லோரும் இந்திய நாட்டு மக்கள். நம் நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டும். அதற்கு நம்மிடத்திலே ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமைக்கு, ஊன்று கோலாக இருப்பது அவரவர்கள் பேசும் தாய்மொழியே ஆகும். அதனால் தான் அகில இந்திய காங்கிரசார் மொழி வழியாகக் காங்கிரஸ் மண்டலங்களை அமைக்கச் சொல்லி தாக்கீது அனுப்பி இருக்கின்றார்கள். ஆகவே நான் இங்கே வந்திருக்கின்றேன். நீங்களும் உங்கள் தாய்மொழியிலேயே காங்கிரஸ் மண்டலத்தை அமைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களிடம் ஒற்றுமை வளரும், உங்களுக்குள் ஒற்றுமை வளர்ந்தால்தான் காங்கிரசு பலமடையும், காங்கிரஸ் பலமடைந்தால் தான், சிகப்பு நாடா ஆட்சி ஒழியும், ஏகாதிபத்தியம் அகலும். என்று பேசிக்கொண்டே போனர். அந்தக் கூட்டத்திலே திருத்தணியைச் சுற்றிலும் வாழ்ந்த மக்கள் நீதிக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் தமக்குத் தேவையில்லை என்ற திடமான எண்ணத்திலிருந்ததால், சத்திய மூர்த்தி அய்யரை மேலே பேச விடாமல் பேசாதீர், பேசாதீர், என்று விண்ணதிர ஒலிகளைக் கிளப்பினார்கள்.

இந்தக் குழப்பமான நிலைமையைத் தமக்கு, தான் கொண்டிருந்த சுயநல எண்ணத்திற்குச் சாதகமாக்கிக் கொண்ட சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள், மக்களைப் பார்த்து ஆத்திரத்தோடு இப்படி ஒரு அசட்டுத்தனமான கேள்வியைக் கேட்டிருக்கிறார். "உங்களுக்கு ஆந்திர மண்டல காங்கிரஸ் வேண்டுமா? தமிழ் நாட்டுக் காங்கிரஸ் வேண்டுமா? என்று. கூடியிருந்த பொதுமக்கள் பொதுவாகவே எங்களுக்குக் காங்கிரஸே வேண்டாம். வேண்டாம் என்று பேரொலி எழுப்பி இருக்கிறார்கள்.

அய்யர் அவர்களுக்கு நீதிக் கட்சியின்மீது இருந்தக் குரோதம், இந்தக் குழப்பத்தால் மிகவும் வலிவு பெற்றதென்றே கூறவேண்டும். அதனால்தான் மக்கள் குரலை அய்யர் அலட்சியப்படுத்தியதோடு நில்லாமல், உண்மைக்கு மாறாக மேலிடத்தாருக்குத் தகவல் அனுப்பி, தன் பழியைத் தீர்த்துக்கொண்டார்; அங்கு வாழ்கிறவர்கள் தெலுங்கர்கள், என்றும், அவர்கள் தெலுங்கு மண்டல காங்கிரஸில் தான் சேர விழைகின்றார்கள், என்ற பொருள்பட, கட்சி வெறியால் மேலிடத்தாருக்குச் சிபார்சு செய்து திருத்தணியையும், அதைச் சுற்றியுள்ள சித்தூர், புத்தூர், உள்ளிட்ட தமிழ் நிலங்களை ஆந்திர காங்கிரஸ் மண்டலத்துடன் சேர்த்துவிட்டார்.

## காங்கிரசாரின் கட்சி வெற்றி

1954-ம் ஆண்டிலே கட்சியின் செல்வாக்கு வளர காங்கிரஸார் நடத்தும்—வெறியாட்டங்களைக் கண் கூடாகப் பார்க்கும் நாம்! அதுவும் 1928-ல் எப்படி இவை நடவாத காரியம் என்று கூற முடியும்: அந்த நாட்களிலேயே காங்கிரஸ் பற்று கொண்டிருந்த சிலர் திருத்தணி உள்ளிட்டு தமிழ்ப் பகுதிகளை ஆந்திர நாட்டு காங்கிரஸுடன் இணைக்கப்பட்டது. அநியாயமான தீர்ப்பு? தீர்ப்பைத் திரும்பப் பெற்று, இப் பிரச்சினையை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று, அகில இந்திய காங்கிரஸுக்கு மனு போட்டார்கள். அம் மனுவை பரிசீலிக்கக் காங்கிரஸ் மேலிடத்துத்

தலைவர்கள் கொடுத்த பதிலால் அவர்கள் (காங்கிரஸ்காரர்கள்) செய்துவிட்ட தவறை மூடி மறைக்க உதவிற்றே தவிர பரிகாரம், ஏதும் கிடைக்கவில்லை.

திரு. சத்திய மூர்த்தி அய்யரின் தீர்ப்பு உள்ளக் கிடக்கை, மேலிடத்தாருக்குத் தவறு என்று பட்டாலும், தீர்ப்பைத் திருத்தவோ, மாற்றவோ, முடியாத அளவிற்கு காங்கிரஸில் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

அவர் கொண்டிருந்த செல்வாக்கால், அவரின் தீர்ப்பை யாராலும், மாற்றி அமைக்க முடியாத நிலை பெற்றுவிட்டது.

எனினும் மேலிட காங்கிரஸுக்கு மனுப் போட்டவர்களுக்குக் கண் துடைப்புக்காகச் சில ஆதரவான வார்த்தைதைகள் சொல்லாமலுமில்லை. "இந்திய மக்களே! முதலில் நாம் அந்நியனை விரட்ட வேண்டும். அவன் போய் விட்டால், நம்மை நாமே ஆளலாம் அப்பொழுது—எதை—எதை—எப்படி அமைக்க வேண்டுமோ? அப்படி அமைத்துக் கொள்ளலாம்" என்று கூறி விட்டார்கள்.

அதற்குப் பிறகு நாட்டிலே ஏற்பட்ட பல மாறுதல்களுள் ஒன்றுதான். இன்று சித்தூர் மாவட்டத்தில் வசிக்கும் பெரும்பான்மை தமிழர்கள், தெலுங்கர்களாக மாறி விட்டார்கள். இல்லை, மாற்றப்பட்டார்கள். மொழி அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தலாயிற்று. ஒரு நாட்டை அடிமைப்படுத்த வேண்டுமென்முல், 'ஒரு இனம் மற்ளுரு இனத்தின் மீது ஆதிக்கத்தைச் செலுத்த நினைத்தால், அவர்கள் மத்தியில் முதலில் மொழியைப் புகுத்தவேண்டும் என்பது அரசியல் தந்திரம். இன்று திராவிட நாட்டிலே இந்தியைப் புகுத்தி தன் ஆதிக்கத்தை என்றென்றும் நிலைநாட்ட வேண்டும், என்று எண்ணுவதைப் போல, அன்று ஆட்சிப் பீடத்திலிருந்த ஆந்திர அதிகாரிகள் நினைத்தார்கள் போலும்! நாம் இந்தியை எதிர்க்கும்போது, ஒரு மொழியால், நம் சொந்த மொழி ஒருபோதும

கெடாது. மாருக அதன் புகழ் பன்மடங்கு உயரும் என்று இன்னமும் தெரிந்தோ, தெரியாமலோ சில தேசீய திராவிடர்களும் கூறுகிருர்கள். அத்தகையவர்களுக்கு சித்தூரின் மொழி ஆதிக்கம் ஒரு எடுத்துக்காட்டாகும். தமிழர்களும், தமிழ்ப் பகுதிகளும், ஆந்திர மண்டல காங்கிரஸில் சேர்ந்த உடன் முதன் முதலாக மாவட்ட மன்றங்களால் நடத்தப்படும் பள்ளிகளில் தெலுங்கு மொழியே போதிக்கப்பட்டது—போதிக்க உத்திரவிடப்பட்டது—

அரசாங்க அலுவலகங்களிலும் கோர்டுகளிலும், நில வரி வசூல் கிராம அதிகாரிகள் ரிக்கார்டுகள், கிராம பஞ்சாயத்து ரிகார்டுகள், இவை யாவும் தெலுங்கு மொழியாக மாறி காட்சி அளிக்கிறது. அன்று நாலரை லட்சம் தமிழர்களும் அந்த மொழியை எதிர்க்காமல் வாய்ப்பொத்தி இருக்கத்தான் செய்தார். வேறு என்ன செய்ய முடியும் அவர்களால். விடுதலை வாங்கித் தருவதாக கூறிய காங்கிரஸ் தலைவர்களே அவர்களை கட்டாயப்படுத்தி பலவந்தமாகச் சிறையிலடைந்து விட்டால் (ஆந்திரத்துடன் சேர்த்து) மக்கள் என்ன செய்வது. யாரைக் கேட்பது என்ருலும், தமிழர்களுக்கு இருந்த பெருந்தன்மையால் வந்தோருக்கெல்லாம் வாழ்வளித்து,—வாழ்ந்து கெட்ட தமிழகம் அன்று அவர்கள் மொழிக்கும் ஆக்கம் அளிக்கத்தான் செய்தார்கள்.

அந்தோ! அவர்களுக்குத் தெரியாது அன்று நுழைந்த தெலுங்கு தன் உரிமையைப் பறிக்கும், இல்லை தன் மாதாவை மாற்ருந் தாய்க்கு மண்டியிடச் செய்யும், மாபாதகச் செயல் என்று. தனித் தனியே மொழிவழியாக காங்கிரஸ் மண்டலங்கள், அமைந்த பிறகு, அதன் முழுப்பலனை அடைய இடைவிடாது பாடுபட்டவர்களில் முதலிடம் பெற வேண்டியவர்கள் ஆந்திரர்களேயாகும்.

தமிழர்களிடத்திலிருந்து வந்ததான மளிக்கின்ற புத்தி, தமிழர் நிலப்பரப்பைத் தானஞ் செய்வதோடு நின்றுவிடவில்லை. தமிழ் மொழியையும் தானம் செய்துக்கொண்டே

வந்தனர். தமிழ் நாட்டு காங்கிரஸார் ஏன்? தன்மானத்தைக்கூட தானஞ் செய்துவிட்டு, தன் நிலை குலைந்து கை கட்டி வாய்ப்பொத்தி நின்றிருக்கிறார்கள். கட்சி வெறியினால், உந்தப்பட்ட காங்கிரஸ்காரர்கள்.

அனைவரும் ஒன்றுபட்டு தன் மானங் காத்திட முனைந்து விட்டால், தமிழ் மொழி ஆட்சி மொழியாகும், ஆட்சி மொழி தமிழ் மொழியாக்கப்பட்டால், தமிழ் நாடு, தனி நாடாகும், தமிழ் நாடு தனித்து விட்ட பிறகு தன் தவறுதலால் தாரை வார்த்து விட்ட தமிழ் நிலங்களைத் தன்னகத்தே திரும்பப் பெற்று மொழி வழிபிரிந்து, இனவழி ஒன்றுபட்டு, ஜனநாயக சோஷலிச சுதந்திர திராவிடக் குடியரசு அமைப்போம் என்பது நமது அசைக்க முடியாத ஆவல் மட்டுமல்ல, எத்தனையோ ஆண்டுகளாக உள்ளத்தே துளிர்விட்டு வரும் தூய எண்ணமுமாகும்.

## தாழ்ந்து கிடந்தத் தமிழகத்து தலை நிமிர்ந்தது எப்படி?

தமிழகத்தின் தலையாம் வட வேங்கடம் தலை தாழ்ந்து கிடந்த அந்தக் கோரக் காட்சியினைக் கண்டார்கள் பலர், பரிதாபப்பட்டார்கள், எனினும் பரிகாரம் தேட முடியாமல் போனது அவர்களால். ஆனால், சிங்காரச் சோலையாம், சிந்தனைக்கு உறைவிடமாம் சென்னை. பெரம்பூரிலே பள்ளிச் சிறார்களுக்குக் கருத்து விருந்தளித்துவந்த சிறப்புடைத் தமிழ்ப் புலவர் புளியமங்கலம் குப்புசாமி யார். அவர் அரிய உழைப்பாலே, அவனியோருக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுதான். தமிழகத்துத் தலை "வேங்கடம்" இழக்கப்பட்டு, தமிழகம் எல்லையற்று தாழ்ந்து கிடந்த கோரக் காட்சி அவர் மனதிலே பெரும் போரை எழுப்பிற்று. அவர், கண்ட, கேட்ட இலக்கியங்களிலெல்லாம் துருவித் துருவிப் பார்த்தார். அவர் பார்வைக்குத் தெரிந்ததெல்லாம் "வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்க் கூறு நல்லுலகம்" தான் ஒரு நாள் இரண்டு நாள் அல்ல பல ஆண்டுகள் தேடி இருக்கிறார்.

மூவேந்தர்க்கும், மூதுரையாய் அமைந்திருந்த வேங்கடத்தை. ஆனால் அவருக்குத் தென்பட்டது வேங்கடத்தை இழந்துவிட்ட மூளித் தமிழகம்தான். வேதனைப்பட்டார், வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சியதைப்போல, அவருள்ளம் பதறியது சீறி எழுந்தார் வேழம்பட்ட வேங்கையாக மாறினார். அன்றோடு தாம் செய்துவந்த ஆசிரியர் தொழிலை மட்டுந் துறக்கவில்லை அவர். வாழ்வையுந் துறந்து விட்டார். இன்ப துன்பங்களை மறந்து விட்டு துறவிக் கோலம் பூண்டு, தமிழ்க் கடல் திரு. வி. க. அவர்களின் அன்பு மொழியால் மங்கலங்கிழாராக மாறி பயணம் தொடங்கினார் வேங்கடத்தை நோக்கி.

அவர் பயணத்தைத் தடைப் படுத்திய பலரால் வீசப்பட்ட வேல்களை எல்லாம் தம்முடைய சீறிய தமிழ்ப் பண்பால் தாங்கிக் கொண்டது மட்டுமல்ல. தமிழ் வேங்கடம் காண வீறு நடை போட்டுக் கொண்டே இருந்தார்.

## ஆசிரியர் மங்கலம் கிழாரும்—திராவிடரியக்கமும்

1946-ம் ஆண்டிலே அரக்கோணத்திலே திராவிடர்கழகத் திறப்பு விழா கூட்டத்திற்கு அருமைத் தோழர். க. **அன்பழகன், எம். ஏ.** அவர்கள் வரவிருந்தார்கள். அந்த நேரத்திலே அவரது குழந்தை இயற்கை எய்தி விட்டதால் அவர் பிரயாணம் தடைபட்டு விட்டது. என்றாலும் ஆர்வத்தின் குன்றான **அன்பழகன்** அவர்கள் தாமதமாக வர நேர்ந்தது. அவர் வர தாமதமேற்பட்டு விடவே கூட்டத்திலே கூடியிருந்த மக்களுக்கு உற்சாகம் குறைந்து விடக் கூடாது என்பதற்காக யாரையாவது பேசவிடலாம் என்று எண்ணி இங்குமங்குமாக அலைந்துக் கொண்டிருந்தேன். ஆசிரியர் மங்கலம் கிழார் இருந்ததைப் பார்த்தேன். அவர் தமிழ் ஆசிரியர் என்று கேள்விப் பட்டிருந்ததால் அவரை அணுகி கூடி யிருக்கும் மக்களைக் கொஞ்சம் சாந்தப் படுத்துங்கள். அன்பழகன் அவர்கள் வருகிறார்கள். அவருக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்லி கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அந்தத் துறவி உடனே மேடைக்கு விரைந்தார்.

மக்களிடத்திலே ஒரு பரபரப்பை உண்டாக்கினர். அவர் பேசும் திறமை படைத்தவர் என்பதை உணர்த்தி விட்டார். அன்று அவர் போட்ட விதைதான். 1953-ம் ஆண்டிலே திருத்தணியில் நடைபெற்று வந்த எல்லைக் கிளர்ச்சியிலே 200 தொண்டர்களைக் கால் நடையாக, வேகும் வெய்யிலி னிலே வீறு நடை போட்டுச் சென்று உரிமை முழக்கமிடச் செய்தது என்றால் அது மிகையாகாது.

## சித்தூர் போராட்டம்

ஆசிரியர் மங்கலம் கிழார் அவர்களாலே, அவர்தம் உழைப்பாலே உயர்த்தப் பட்டதுதான் சித்தூர் போராட் டக் கொடி, பட்டம் பதவிக்கு ஆசைப் பட்டு, பணநாதன் அருள் பெற எண்ணியல்ல அவர் போர்க் கொடியை உயர்த் தியது. தாய் மொழி சிதைபக் கூடாது. தமிழன்னைக்குப் பிறந்தோம், தமிழ்த்தாய் விடுதலைப் பெற வேண்டும் என்ற அவரது ஆசை நிறைவேற்றப் பட வேண்டும். அதற்காக அவர் வகுத்த பாதை மிக-மிகப் பயங்கரமானது. மொழி வெறியர்களாலே சித்தூர் மாவட்டத்திலே சிதைக்கப்பட்டு வந்த சிங்காரத் தமிழ் மொழி மீண்டும் மறு மலர்ச்சி யடை யச் செய்த பெருமை நமது ஆசிரியர் மங்கலம் கிழாரையே சாரும். தம் வாழ்வைத் துறந்து விட்ட துறவியால் திறந்து விட்ட அறநெறித் தமிழ்ச் சங்கங்கள் அனந்தம். அதற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள், அப்பப்பா! எண்ண முடியா தவை! எழுத முடியாதவை.

ஏறத்தாழ எட்டாண்டுகள் வரையில் வேங்கடத்துடன் நல்லதோர் தமிழகம் அமைக்க முற்பட்டார் அவர் தேடிச் சென்ற பாதையிலே கிடந்த கல்லையும், முள்ளையும் கள்ளி யையும், காளான்களையும் களைந் தெடுத்து அமைத்தது தான்—“திருத்தணிப் போராட்டம்” என்ற புனிதப் போர்க் களம்.

## 1928-க்குப் பின் 1953-ல் சித்தூர் ஏன் போர்க்களமாக மாறிற்று!

1946-ம் ஆண்டிலே ஆசிரியர் மங்கலம் கிழார் அவர்களின் முயற்சியிலே அறநெறித் தமிழர் சங்கங்களாக அரும்பி மாணவர் உள்ளங்களிலே இடம் பெற்று, 1949-ம் ஆண்டிலே துளிர்த்துத் தளிர விட்டு, 1950-ம் ஆண்டிலே தோழர். என்.ஏ.'ரசீத் அவர்களின் பெரு முயற்சியால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணித்தரமான பிரச்சாரத்தால்,ஓங்கி வளர்ந்து, 1951-ம்ஆண்டிலே பல்லாயிரக் கணக்கான மக்களின் கவனத்தைக் கவர்ந்து விட்டதொரு மரமாகி விட்டது. பொதுத் தேர்தலுக்குப் பிறகு சென்னை மாநிலம் அடைந்த பல மாறுதல்களினல், ஆந்திர மாநிலக் கோரிக்கை உச்சநிலை அடைந்ததால், ஏற்பட்டக் கொந்தளிப்பும் குமுறலும் இந்திய துணைக் கண்டத்து ஆட்சியின் அடிப்பீடத்தையே அசைத்து விட்டது எனலாம். ஆசிரியர் மங்கலங் கிழார் மனதிலே கொழுந்து விட்டெரிந்துக் கொண்டிருந்த 'வடவேங்கடம்' மற்ற மக்களிடத்திலே ஆச்சரியக் குறியாக இருந்து, 8-ஆண்டு கட்குப் பிறகு கேள்விக் குறியாக மாற்றப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி யடைந்த மங்கலங் கிழார், எட்டு நாட்கள் வேங்கடத்திலே சிறைப் பட்டு மீண்டார். மீண்டும் சிறை செல்ல இருந்த வேளையிலேதான் திருத்தணியில் போர் முடிவு பெற்று விட்டது. இல்லை முடித்து விட்டார்கள். தமிழர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

திரண்டிருந்த மக்களின் சக்தியை மண்ணுக்கி விட்ட மகா பாவிகளைப் பற்றி மன வேதனைப் பட்டார்- வேதனை அவரை விருந்தாக்கிக் கொண்டது.

" வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்க் கூறு நல்லுலகம்" அமைக்க வாரீர் என்று மார்பு தட்டிக் கூப்பிட்ட அந்த மாவீரர் மங்கலங் கிழார்! அந்தோ! மாரடைப்பால் மாண்டு விட்டார். மக்களை விட்டுப் பிரித்து விட்டது அவரை மரணம். ஐயகோ! என்றலரும் அவர் குடும்பத்தி

னர்க்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருவேங்கடத்தை மீட்கத் திருமங்கலங் கிழாரைத் தானம் செய்து தியாகத் தழும் பேற்றுள்ள அவரின் மைந்தர் கட்கு நம் நன்றியையும், வணக்கத்தையும் செலுத்திக் கொள்கின்றோம்.

## 5—1—1953 வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி மாநாடு

5—1—53-ல் வடவெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி என்ற பேரால் ஒரு மாநாடு தோழர் டி. செங்கல்வராயன் தலைமையில் நடைபெற்றது. அதில் சர்வ கட்சித் தலைவர்கள் முன்னள் அமைச்சர் பழனிச்சாமி, கம்யூனிஸ்டு ஜீவானந்தம், ம. பொ. சி. அமைச்சர் பக்தவத்சலம் கலந்துக் கொண்டார்கள். சித்தூர் தமிழ்ப் பகுதிகளைச்சென்னையோடு சேர்ந்து வாழ வேண்டியதின் அவசியத்தைக் கூறினார்கள். திராவிட கழகத்தின் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. தன் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்தார். தி. மு. க. வின் சார்பில் என்னையும், செங்கற்பட்டு மாவட்ட செயலாளர் சி. வி. எம். அண்ணாமலையையும் பொதுச் செயலாளர் அனுப்பி வைத்தார். தி. மு. க. மாநில மாநாட்டின் தீர்மானத்தை அங்கே விளக்கி நாங்கள் பேசினேம்.

தீர்மானம்:

### சென்னை சித்தூர் பிரச்சனை

மொழிவழி அரசு அமைக்கப்படும் முறைப்படி சென்னை நகரம் தமிழகத்துக்கு உரிமையானது என்பது மறுப்புக்கு இடமற்ற உண்மையானதாக இருந்தும், மொழி வழி அரசு அமைப்பு முறைப்படி சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி பெருவாரியானவர்களால் தாய் மொழியாகக் கொள்ளப் பட்டுள்ள வட்டாரங்கள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டியது நியாயமானதாக இருந்தும், சிலர் தமிழர் தெலுங்கர் மனபேதமும் கசப்பும் வள

ரும் விதமாகவும் செய்யும் கிளர்ச்சியை இம்மாநாடு கண்டிப்பதுடன்,இந்தக்கிளர்ச்சியைப்பயன்படுத்திக்கொண்டு,இந்திய சர்க்கார்சென்னையை, மத்திய சர்க்காரின்நேரடிநிர்வாகத்தின் கீழ் தனிநகரமாக்கும் முயற்சியில்ஈடுபடுவதையும்இம்மாநாடு கண்டிப்பதுடன், மொழிவழி அமைப்புகளை உடனடியாக ஏற்படுத்தும் கிளர்ச்சிக்கு இம்மாநாடு ஆதரவளித்து, அதன் மூலமாகவே திராவிடக் கூட்டாட்சிக்கு வழிகோலுவது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

மொழிவழி மாகாணம் பிரியும் போது சித்தூர் தமிழ் பகுதிகள் சென்னையோடு சேரவேண்டுமென்ற தி. மு. க. வின் திட்டவட்டமான கொள்கைகளை கே. விநாயகம் அதே மாநாட்டில் பாராட்டிப் பேசினார். அவர் பேச்சின் சுருக்கம்:

"இந்த மாநாட்டின் குறிக்கோள் வெற்றி பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏனென்றால் இதில் எல்லா அரசியல் கட்சி தலைவர்களும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்கு ஒரே ஒரு குறையிருந்தது காங்கிரசின் சார்பில் மேயர் டி. செங்கல்வராயன் அவர்களும், பக்தவச்சலம், பழனிச்சாமி அவர்களும் தமிழ் அரசுக் கழகத்தின் சார்பில் ம. பொ. சி. யும் பொது உடைமைக் கட்சி சார்பில் ஜீவானந்தமும், தமிழர் என்ற முறையில் அண்ணல்தங்கோவும், கலந்துக் கொண்டிருக்கின்றீர்கள். திராவிடக் கழகத்தின் தனிப் பெருந் தலைவர். ஈ. வெ. ரா. இந்த மாநாடு வெற்றி பெற தன் வாழ்த்துதலை அனுப்பியிருக்கிறார். திராவிடத்தின் பெர்னாட் ஷா அரசியல் அறிஞர் காஞ்சித் தந்த கருவூலம். தி. மு. க. வின் பொதுச் செயலாளர் அண்ணாத்துரை வரவில்லை என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தக் குறையும் நீங்கிற்று. அவரின் அருமைத் தோழர்களான செங்கற்பட்டு மாவட்ட செயலாளர். சி. வி. எம். அண்ணாமலை வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் ஏ. எல். சி. கிருட்ணசாமி இருவரையும் தம் சார்பில் இந்த மாநாட்

டிற்கு அனுப்பி வைத்துள்ளார்" இவ்வாறு அம் மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவர் என்ற முறையில் வரவேற்றுப் பேசினர்.

## மறியல்

K. விநயகம் தலைமையில் வட வெல்லைப் பாதுகாப்புக் குழுவின் சார்பில் திருத்தணி சப் மேஜிஸ்ட்ரேட் கோர்டுக்கு முன் மறியல் செய்வதெனத் தீர்மானித்து, 12-4-53 முதல் திருத்தணியில் சர்க்கார் காரியாலயங்களுக்கு முன்



**14—5—53 மறியலில் கலந்து கொண்டு தடியடிக்கு ஆளானவர்கள்**

மறியல் ஆரம்பமாயிற்று. இந்த மறியலுக்கு பொது மக்களின் ஆதரவு அதிகம் கிடைத்தது எனினும் அரசாங்கத்தின் கவனம் மறியல்மீது திரும்பவில்லை.

**மறியலில் தி. மு. கவினர்**

சித்தூர் பிரச்சினையில் திருத்தணி மக்களுக்கு மட்டுமல்ல பங்கிருப்பது. தமிழர்கள் என்று தன்னை கூறிக் கொள்ளும் எவனுக்கும் உரிமை உண்டு என்ற நிலையை

விளக்கவும் தி. மு. க. தன் முழு ஆதரவு தரவும் 200 பேரடங்கிய ஓர் போராட்டப்படை அரக்கோணத்திலிருந்து 8 மைல் தூரத்திலுள்ள திருத்தணிக்குக் கால் நடையாய்ச் சென்று மறியல் செய்தது. மறத் தமிழரின் மானங் காத்திட 16-4-53 ல் புறப்பட்டது. அந்த படையை நானே தலைமை வகித்து நடத்திச் சென்றேன. என்றுங் காணுத விறு விறுப்பு ஏற்பட்டது. கொப்பளிக்கும் அந்த வெய்யிலையும் பார்க்கவில்லை, குமுறும் எரிமலையினர் கொந்தளிக்கும் கடலாயினர்.

வீரர்காள், புகுந்தது எல்லைப் போர் புறப்படுங்கள் போருக்கு! நாட்டு எல்லையைக் காக்க வீட்டிற்கோர் வீரன் தேவை! தமிழனின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்! என்று சங்கநாதம் எழுப்பி போர் முரசு கொட்டிப் புறப்பட்டது.

வழி நெடுக மக்கள் ஆதரவு—தாயகத்தின் எல்லையை மீட்கச் சென்ற அந்தப் படைக்கு தமிழனின் வலிமையை உணராது தான்தோன்றித் தனமாகப் பேசி அது கேட்டு சினங் கொண்டு சீறி எழுந்து, தமிழனைப் பழிக்கும் தாகர்களும் தரணியில் உண்டோ? என சிங்க மெனப் பாய்ந்து கனக விசயனை கல் சுமக்க வைத்த சேரன் செங்குட்டுவனயினர்.

அந்த மாவீரர்கள் எங்களுக்கு உரிமையான தமிழ் நிலத்தை ஆந்திரர்களுக்குச் சொந்தம் என பிரகடனம் படுத்துவதன் மூலம் ஆந்திரர்க்கும், எங்களுக்கும் உள்ள ஒற்றுமையைக் குலைக்க குள்ளநரி வேலை செய்யும் ஏ! வடநாட்டு ஏகாதிபத்தியமே! பார் எங்கள் பைந்தமிழ்ப் படையை என்று பரணிபாடி புறப்பட்டது. அருமை ஆச்சாரியார் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் 1937-ல் இந்தியெனும் மந்தியை மக்கள் மத்தியில் புகுத்தி தமிழனின் பொறுமையை சோதனை செய்த அந்த நேரத்தில் இந்திக்கு தமிழ் நாட்டில் ஆதிக்கமாம். நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே என்று பள்ளுபாடி தமிழக மெங்

கும் சுற்றி வந்த போர்படை தமிழகத்தையே உலுக்கி விட்டதே, அஞ்சா நெஞ்சன் மறைந்த மாவீரன் அண்ணல் அழகிரிசாமி நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம். அந்த மங்காத புகழ் பெற்ற மாவீரர்களின் போராட்ட நிகழ்ச்சிதான். அன்றைய எல்லைப் போரின் நிகழ்ச்சியை பார்ப்போரின் நினைவிற்குக் கொண்டு வந்தது. சரியாக முற்பகல் 11 மணிக்கு திருத்தணி வந்தடைந்தது. விநயகம் போர் படைத் தலைவருக்கும் உடன் வந்த தோழர்களுக்கும் மலர்மாலை அணிவித்து வர வேற்றனர். அன்று எங்கும் போலீஸ் மயம். உயர்தர போலீஸ் அதிகாரிகள் யாவரும் முகாம் செய்திருந்தார்கள் திருத்தணியில்.

களம் பல கண்ட கர்ம வீரர்களாயிற்று. தி. மு. க. வினர். அவர்கள் தலைமை யேற்று மறியல் செய்கிறார்கள் என்றால் சொல்லவா வேண்டும். இவ்வாறு பேசலாயினர், பொது மக்கள். 2 மணிநேரம் மாஜிஸ்டிரேட் கோர்டுக்கு முன்னால் சாத்வீக மறியல் நடைபெற்றது.

வடநாட்டுச் சர்க்காரே! சித்தூர் தமிழ் பகுதிகளை சென்னையோடு சேர்! ஆந்திர பிரிவினைக்கு முன் எல்லைக் கமிஷன் வை! பெல்லாரிக்கு நீதி வழங்கியதைப் போல் சித்தூருக்கும் நீதி வழங்கு! சித்தூர் மாவட்டம் தகராருக்குரிய பிரதேச மெனப் பிரகடனம் செய்! என்று விண்ணதிர ஒலித்துத் தன் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டனர். கோர்ட்டு மூடப்பட்டது மறியல் வெற்றி பெற்றது தமிழர்களின் கொந்தளிப்பை சர்க்கார் அறிய ஒரு வாய்ப்பாயிற்று அன்று நடை பெற்ற மறியல்.

மறியல் முடிந்ததும் தொண்டர்கள் ஊர்வலவாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். வன்னியர் சத்திரத்தில் போர்ப்படைக்குப் பாராட்டுக் கூட்டம். அன்று பேசினார் விநயகம். புது முறுக்கோடு. தமிழர்கள் அதுவும் சிலர் திருத்தணியில் மட்டும் தானிருக்கும் என்று எண்ணியிருந்தீர்கள் ஏ! வட நாட்டுச் சர்க்காரே! ஆந்திரத் தலைவர்களே! இதோ பார் இந்த 200 இளங்காளைகளை! தி. மு. க. தீரர்

களே! இன்று வடஆற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் **ஏ. எல். சி. கிருட்ணசாமி** தலைமையில் 200 பேர், நாளை **மு. கருணநிதி** தலைமையில் 1000 பேர், மறுதினம் 5000 பேர் **நாவலர் நெடுஞ்செழியன்** தலைமையில். அத்தனை பேருக்கும் தலைவராயிருக்கும் அறிஞர் **அண்ணதுரையே** திருத்தணிக்கு வந்துவிட்டால், வடநாட்டு சர்க்கார் தன் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான். எங்கெங்கு தி. மு. கழகக் கிளைகள் இருக்கிறதோ? அங்கிருந்தெல்லாம் படை புறப்படும் திருத்தணி நோக்கி. ஜாக்கிரதை உடனே சித்தூரை பிரித்து விடு என்று எச்சரிக்கின்றேன்" எனக் கூறியதை என்னல் இன்றும் மறக்க முடியவில்லை. அப்படிப் போற்றிய விநயகம் தான இன்று தூற்றுகிருர், என்று நமக்கே ஒரு கணம் வியப்பேற்படுகிறது. "**பதவி**" ஆசை யாரைவிட்டது. எதையோ கூறப்போய், எங்கோ முடித்து விட்டேன் என்றெண்ணுகிறீர்களா! விவரம் நூலின் பிற் பகுதியிலிருக்கிறது.

## அண்ணவும் திருத்தணி மறியலும்

மறியல் நடந்துக் கொண்டிருக்கையில் 23-4-53ல் அறிஞர் அண்ண, கலைஞர் மு. கருணநிதி: "திராவிட நாடு" துணை அசிரியர், இராம அரங்கண்ணல், சி. வி. ராச கோபால் ஆகியோர் திருத்தணி மறியலை பார்வையிட்டார் கள். அந்த நேரத்தில் **அண்ண அவர்**களிடம் விநயகம் கூறி யவை தி. மு. க. வினர் இதுவரை திருத்தணி போராட்டத் தில் செய்து வரும் தொண்டைப் பாராட்டியும், தாங்களே, தலைமை யேற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண் டார். போராட்டத்தை எதிர்ப் பார்த்து இயங்கவில்லையே தி. மு. க. அல்லது போராட்டம் இருந்தால்தான் கட்சி வளரும் என்ற நிலையும், தி. மு. க. விற்கு இல்லாத நேரம், எனவேதான் கூறிவிட்டார் திட்டவட்டமாக! அண்ண. விநயகம், நீங்களே தலைமை யேற்று நடத்துங்கள். எங்கள் தோழர்கள் இதுவரை ஒத்துழைத்தது போலவே, இனி யும் ஒத்துழைப்பார்கள். ஒரு கட்சியின் பேரால் இதை

நடத்த வேண்டாம். எல்லா கட்சியையும், ஏன் காங்கிரஸ் கட்சியைக் கூட அழைக்கலாம். இது தமிழர்களின் பொது வான கோரிக்கையாகும். குறிக்கோள் வெற்றிபெற வேண் டுமே யொழிய, யார் நடத்துவது என்பது பிரச்சினையல்ல, எனவே அதனை கட்சி சார்பு அற்று நடத்துங்கள். வெற்றி பெறுவோம் என்று தன் எண்ணத்தைச் சொல்லிவிட்டு வந்தார்கள். இதிலிருந்து நன்ருக புரிகிறதல்லவா?



**20—6—53-ல் திருத்தணியில் ரயில் நிறுத்துகிருர்கள்.**

போராட்டத்தின் மூலம் தி. மு. க. வளர விரும்ப வில்லே. மக்கள் மன்றத்திலே இடம்பெற்ருல் தாஞக வள ரும் என்பது தி. மு. க. வின் திடமான எண்ணம். விஞய கம் அண்ணுவிடம் கூறியதைப் போல வேறு எந்தக் கட்சி யிடமாவது சொல்லியிருந்தால், இப்படியா பதில் வந்திருக் கும். ஆஹா! போராட்டம் தானே! அதற் கென்ன நாங் களே நடத்துகிறேம். எங்களுக்குதான் அது பழக்கமான காரியமாயிற்றே எனக் கூறி ஏற்றுக் கொண்டிருப்பார்கள். தன் கட்சி வளர இதை தி. மு. க. விரும்பவில்லே.

## பஞ்சாயத்துபோர்டு தேர்தல். மறியல் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையில் பஞ்சாயத்துபோர்டு தேர்தல் வந்தது. தேர்தல் முடியும் வரை மறியல் தற்காலீகமாக நிறுத்தப்பட்டது. 29-4-53-ந் தேதி திருத்தணி பஞ்சாயத்துபோர்டு தேர்தல்! ஆம் தித்திக்கும் சேதி அது. பத்து அங்கத்தினர்கள் ஒரு தலைவர். ஆக 11 நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் அத் தேர்தல் மூலம்.

அந்தத் தேர்தலில் எங்கும், எவரும் கேள்வியுறாத வெற்றி! முழு வெற்றி!! 9 அங்கத்தினர்கள், ஒரு தலைவர் உட்பட 10 பேர் தமிழர்கள் வெற்றி! பெற்றனர். என்றாலும் நின்றவர்கள் திறமைசாலிகளா! அல்ல செல்வாக்குள்ளவர்களா? அல்ல, பின் எப்படி இவர்களால் வெற்றி காண முடிந்தது. சாதாரணமானவர்கள் தான். என்றாலும் வெற்றி பெற்றார்கள் என்றால் நான் பொறுமையோடும், பூரிப்போடும் கூறிக் கொள்வேன். நமது கழகத் தோழர்களின் இடையறாத உழைப்பாலும், பிரச்சாரத்தாலும் தமிழர்கள் கைப்பற்றியது பஞ்சாயத்து போர்டுதான் என்றாலும், அது பாராளுமன்றம் வரை எட்டிற்று. திருத்தணியில் உள்ளவர்கள் பெரும்பாலோர் தெலுங்கர். என்றும் அது ஆந்திரத்திற்குத் தான் சொந்த மென்றும் சொல்லி, சொந்தம் பாராட்டிய ஆந்திரத் தலைவர்களுக்கும், வட நாட்டுச் சர்க்காருக்கும் திருத்தணி தேர்தலின் முடிவு பேரிடியை உண்டாக்கியது.

தேர்தல்—தமிழர்—தெலுங்கர்—என்ற பிரச்சினையில் நடைபெற்றது.

திருத்தணி தேர்தல் பஞ்சாயத்து போர்டு தேர்தலாகவோ? நகர நலனை அடிப்படையாக வைத்து நடந்த தேர்தலாகவோ? நடக்கவில்லை திருத்தணி தமிழருக்கா! தெலுங்கருக்கா? என்ற அடிப்படையில் பிரச்சாரம் செய்து நடைபெற்ற தேர்தலாகும். மக்கள் கூறிவிட்டார்கள் திருத்தணியும் சுற்றுப்புற தமிழ்ப் பகுதிகளும் தமிழருக்குத் தான் என்று! தமிழர்களை ஆதரிக்கும் முகத்தோடு, வாய் வலிக்கக்

கூறுகிறார்கள் காங்கிரஸ் தலைவர்கள். ஏன் தகராறு இருந்தால் சுமுகமாக நேச உறவோடு ஜனநாயக முறைப்படி வாக்கெடுத்து பிரச்சினையை தீர்த்துக் கொள்ளலாமென்று.

ஜனநாயக முறைப்படி வாக்கெடுத்தாகி விட்டது. மக்களும் தீர்ப்பு கூறிவிட்டார்கள். திருத்தணி தமிழருக்குத்தான் என்று. ஆனால் இன்று திருத்தணி கட்டாயமாக ஆந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஜனநாயகம் பேசும் காங்கிரஸ்காரர்களால், ஆசியாவின் ஜோதியால், அகில உலக கண்ணோட்டம் படைத்த பண்டிதரால், ஜனநாயகத்தைக் கொலை செய்தாகி விட்டது. இனி ஜனநாயகம் பற்றிப் பேச காங்கிரசுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது. என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

தேர்தல் வெற்றி தி. மு. க. வெற்றி என்றேன். இதை மறுக்க முடியாது யாராலும், என்று ஆதார பூர்வமாகக் கூறுவேன். "தலைகொடுத்தும் தமிழைக் காப்பேன்" இது மிஷ்டர் மாநிலத்தின் தாரக மந்திரம். திருத்தணியிலே நடைபெறுகிறது எல்லைப் பிரச்சினையை முன்வைத்து தேர்தல். தலைகாட்டவில்லை இவர்கள் திருத்தணியில். எங்கே சென்றார்கள் இந்த மாவீரர்கள்! கன்னித் தமிழ் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

தமிழரின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் தேர்தல் தமிழர் திருத்தணியில் உரிமையோடு வாழ்வதா? அல்லது அடிமையாய் வாழ்வதா! என்ற பிரச்சினையிலிருக்கும், அந்த நேரத்திலே ஏன் வரவில்லை இந்த மறக்குடி மாவீரர் ம. பொ. சி. வேங்கடத்தை விடமாட்டேன் என்று அடிக்கடி கூறுகிறார்கள். ஆனால் தேர்தல் நேரத்திலே ஏன் திருத்தணியை எட்டிப் பார்க்க வில்லை. இவர் வேண்டாம் தலைவர், தன் சிஷ்ய கோடிகள், சந்துமுனைச் சிந்துபாடும் சின்ன அண்ணாமலை எங்கே போயிருந்தார்.

சித்தூர் போராட்டத்தில் தான் ஏதோ சாதித்து விட்டதாக வீம்பு பேசுகிறார்களே, வீராப்போடு, அன்று எங்கே போய் விட்டிருந்தனர் இவர்கள்.

திருத்தணியில் அன்றுழைத்த உத்தமர்கள் யார்? தடியடிக் காளாகிக் கடுஞ்சிறை நண்ணிய நல்லதம்பிகள் யார்? தியாகத் தழும்பேற்ற தூய்மையாளர்கள் யார்? உயிரையும் பணயம் வைத்து ஓங்காரக் கூச்சலிட்டு, ஓடிவரும் ரயில் என்ஜினுக்கு முன் நின்று ரயிலை நிறுத்தியவர்கள் யார்?

தொழிலாளர்த் தோழன், துயர் நீக்கும் தூய்மையாளன் **N. A.** ரசித், முதுகொடிந்து பாடுபடும் **A.** முனுசாமி, நகைச்சுவை நண்பன் அருமைத் தோழன் ஆறுமுகம், செங்குருதி கொட்டிய சீயம்சம்மந்தன். வெஞ்சமருக் கஞ்சா வீரன் **R.** சாமிநாதன். எதிரிக்கும் நன்மை செய்யும் பண்புள்ள நடராசன். கூறட்டும் நெஞ்சில் துணிவிருந்தால், நேர்மையில் நம்பிக்கையிருந்தால், செரு முனைக்கு அஞ்சா செம்மல்கள் யார்? என்று நம்மை இழித்தும், பழித்தும், கூறும், தமிழரசுக் கழகத் தோழர்கள் கூறட்டும். நாம் தருகிறோம் மானங் காத்த மாவீரர்கள் பட்டியலை மறுக்கட்டும் இதனை மார்தட்டி ஏசும் ம. பொ. சி. க்கள்.

30-4-53 ல் தேர்தல் முடிந்த பிறகு வெற்றி விழா மாபெரும் பொதுக்கூட்டம். அதிலே விநயகம் பேசியதைக் குறிப்பிட விரும்புகிறேன். இது 1-5-53 தினப் பத்திரிக்கைகள். வாரப் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளது. இன்றைய தமிழர்களின் அமோக வெற்றிக்குக் காரணம். நானே அல்லது மற்ற தனிப்பட்டவர்களோ? காரணமல்ல. தமிழகத்தின் மாபெரும் இயக்கமான தி. மு. க. தான். குறிப்பாக வ. ஆ. மா. தி. மு. க. செயலாளர் ஏ. எல். சி. கிருட்ணசாமி அவர்களையும், அவரைச் சேர்ந்த தோழர்களையும் திருத்தணிவாழ் தமிழ்மக்கள் என்றென்றும் மறக்கமாட்டார்கள்! என்பதாக வேடிக்கை என்னவென்றால், எந்த விநயகத்தால் நம்முடைய தோழர்கள் பாராட்டப் பட்டார்களோ, எந்த தமிழர்கள் நம் சேவையை என்றென்றும் மறக்கமாட்டார்கள் என்று கூறினரோ! அதே தமிழர்களைக் கொண்டு நம்மை, (26-9-53 திருத்தணியில் நடைப்பெற்ற தி. மு. க. கூட்டத்தில் குழப்பம் விளைவித்தது.) அடிக்கத்

தாண்டிவிட்டார் என்ற துரோகச் சேதியை தமிழகம் என்றும் மறக்காது. இவர் உண்மையான தமிழர்தானு? என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

## மேதினவிழா

தி. மு. க. வினருக்கு டால்மியாபுரம் போராட்டம் தான் முக்கியமே தவிர திருத்தணியைப்பற்றி கவலையில்லை எங்கள் தனிப்பெருந் தலைவர் ம. பொ. சி. தான் தலையைக் கொடுத்து வருகிருர் என்று துதிபாடிவரும் விஞயகம்.

அவர் கூறியதையே நினைவூட்ட விரும்புகிரேம்.

1-5-53 மேதினவிழா மாபெரும் பொதுக்கூட்டம் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் தி. மு. க. வின் சார்பில் கூட்டப்பட்டதாகும். அதில் பேசியிருக்கிருர் பூரிப்போடு, அறிஞர் அண்ணு அவர்கள் முன்னிலையில் திருத்தணி போராட்டத்தில் வ. ஆ. மா. தி. மு. க. வும் சித்தூர் மாவட்ட தி. மு. க. வினரும்தான் முழு ஆதரவு தந்துவருகிருர்கள். இதற்கு என் இதயங்கலந்த நன்றியை அண்ணு அவர்க்ளுக்குக் கூறிக்கொளவேன். சித்தூர் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த அண்ணு போன்றவர்களால்தான் முடியும். அண்ணுவையும், அய்யாவையும் நம்பித்தான் நான் இந்த போராட்டத்தை ஆரம்பித்தேன். வெற்றி நிச்சயம் முன்னேற்ற கழகம் தலைமையேற்று நடத்துமேயாஞல் 3 நாட்களில் முழு வெற்றி நிச்சயம். இதற்காவன அண்ணு அவர்களைச் செய்துதருமாறு வேண்டுகிறேன் என்பதாக.

## என் தலைமையில் மறியல்

திருத்தணி பஞ்சாயத்து போர்டு தேர்தலுக்குப் பிறகு மீண்டும் மறியல் வழக்கம்போல் 14-5-53-ல் மாஜிஸ்ரேட் கோட்டுக்கு முன்ஞல் நடைபெற்றது. அந்த மறியலுக்கு நானும் தோழர் K. V. யும் தலைமை வகித்தோம்.

## தடியடிப் பிரயோகம்

கோர்ட்டு வேலை தடைப்படுவதாகக் கூறி எங்களை ஸ்தல போலீசார் வழி மறித்தார்கள். எனினும் எங்கள் மறியலை நாங்கள் நிறுத்தவில்லை. போலீஸாரால் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. திருத்தணி போராட்டம் சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நிகழ்ச்சி அன்று நடைப்பெற்றது. அன்றுதான் மூதன் முதலில் தாயகத்திற்கு ரத்தஞ் சிந்தவேண்டிய வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. அன்றைய மறியலில் 7 பேருக்கு பலத்தகாயம் அதில் 5பேர் தி. மு. க. வைச்சேர்ந்தவர்கள் என்ற தித்திப்பான செய்தியை முதல் முதலில் திராவிடத்திற்கு அறிவித்த தேதியாகும்.

சமருக்கஞ்சா சம்மந்தன்—திருத்தணி தி. மு. க. செயற்குழு உறுப்பினர். சாதாரண தையற் கடை வைத்து வயிறு வளர்க்கும் பாட்டாளி தோழன்தான். எனினும், தன் தொழிலை விட்டு, மறியல் களத்தில் குதித்தார். அந்தோ! அத்தகைய அன்பரின் ரத்தத்தைத்தான் ருசிபார்த்தார்கள் ஆதிக்கக்காரர்கள். மண்டையை பிளந்துவிட்டார்கள்—பீறிட்டு வெளியேவரும் ரத்தத்தை ஒரு கையாலும், தாயகத்தின் விடுதலைக்கொடி மற்றோர் கையிலும் வைத்துக் கொண்டு வீர நடைப் போட்டக்காட்சி கோழைகளையும் வீரர்களாக்கிற்று என்று கூறலாம்.

குருதிக் கொட்டிக் கொண்டிருக்கும் நேரத்கிலே கூட குரல்கொடுக்க மறுக்கவில்லை.

இந்த ஆகாத அக்ரம செயலைக் கண்டித்து அன்று எல்லாக் கடைகளும் கதவடைப்பு செய்து அடிபட்ட தோழர்களுக்கு ஆதரவும்—தடியடிப் பிரயோகத்துக்கு கண்டனத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சி அன்றுவரை ஏற்பட்டது கிடையாது. எனவே மறியல் தொண்டர்களுக்கு புது உற்சாகம் பிறந்தது. தொண்டர்களின் உற்சாகம் அதிகரித்ததைப் போலவே

போலிஸ் கண்காணிப்பும் அதிகரித்தது எனலாம். நகர் எங்கும் போலிஸ்படை உயர்தர போலிஸ் அதிகாரிகள் திருத்தணியில் முகாம். அன்று குருதி கொட்டியது நம்முடையது சம்மந்தன். இன்று கும்மாளமடிப்பது தமிழரசு கழகமா? இதை குறிப்பிடும்போது தமிழ் அரசு குஞ்சுகளோ! விபீஷண விநயகங்களோ மறுக்கலாம்.

இதோ ஆதாரம், கூறட்டும் இதற்குப்பதில். ரத்தம் சிந்தியவர்கள் நாங்கள்தான், ரணகளத்தில் சிக்கியவர்களும்



**21—6—53-ல் கைது செய்தவர்களை காவலில் காக்கிறார்கள்**

நாங்கள்தான் என்று வீராப்பு பேசும் வீணர்கள் மறுக்கட்டும் இதனை!

தொண்டர்கள் அடிப்பட்ட செய்தியைக் குறித்து 15-5-53--ல் வெளிவந்த தினத்தந்தி இதழில் 4-வது பக்கத்தில் 3-வது கலத்திலுள்ள செய்தியை அப்படியே தருகின்றேன். படியுங்கள்.

"திருத்தணி கோர்ட்முன் மறியல் செய்த தமிழ் தொண்டர்கள்மீது தடி அடி"

நகரில் பலத்த பந்தோபஸ்து அரக்கோணம் மே 14:-

திருத்தணி மாஜிஸ்திரேட் கோர்ட்முன் இன்று தமிழ் தொண்டர்கள் மறியல்செய்தனர். கே. விநயகம் M. L. A. வும் வடஆற்காடு ஜில்லா தி. மு. க. காரியதரிசி ஏ. எல். சி. கிருட்ணசாமியும் மறியலுக்கு தலைமை தாங்கினர். கோர்ட்டு நடவடிக்கைகள் தடைப்படுவதாகக் கூறி போலீஸார் அவர்களை கலைந்து செல்லுமாறு கேட்டதற்கு— அவர்கள் மறுத்துவிடவே போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

7 பேருக்கு பலத்த அடிப்பட்டது. அடிப்பட்டவர்களில் 5 பேர் தி. மு. கழகத்தைச் சேர்ந்த தொண்டர்கள். போலீஸ் அடக்கு முறையைக் கண்டித்து இன்று மத்தியானம்முதல் திருத்தணியில்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நிலைமையை விளக்கி C. N. அண்ணுதுரைக்கும், ம. பொ. சிவஞான கிராமணியாருக்கும் விநயகம் தந்தி அனுப்பியுள்ளார். ஜில்லா போலீஸ் சூப்ரன்டென்ட் ஸ்தலத்திற்கு விஜயம் செய்திருக்கிறார். திருத்தணியில் பலத்த பந்தோபஸ்து இருந்து வருகிறது."

இந்த சேதியைக் கண்டு மிஸ்டர் மாநிலத்தைப்போல ஏதோதானோ என்று இருந்துவிடவில்லை பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு உடனே எனக்கு தந்தி கொடுத்தார் (15-5-53-ல்) அவரை சந்திக்கும்படி.

**Krishnasamy, Milton, Arkoan**
**Meet Anna Tody Madras.**

Mathialagan.

ஆம். பொறுப்பாளர் தோழர் K. A. மதியழகன் அவர்கள்தான் கொடுத்திருந்தார் அந்தத் தந்தியை! அண்ணுவை சந்திக்கும்படி சென்றேன் சென்னைக்கு—செப்பினேன்—திருத்தணியில் நடைபெற்ற அடக்கு முறையைப்பற்றி. நல்ல ஊக்கமளித்தும்—உற்சாகத்தோடும் வேலை செய்யும்படியும் கூறி அனுப்பினர்.

## புகுந்தது புயல்! தலைமை மாறியது

அடிப்பட்ட சேதி கேட்டு திருத்தணிக்கு வந்த ம. பொ. சி. ஆதரவு கூறினரா? இல்லை! இல்லை! கட்சி வெறியை கிளப்பினர். இவரின் விபரீதச் செயல் அன்று வரை கள்ளமின்றி வெள்ளை உள்ளத்தினராய் வேலை செய்த நூற்றுக்கணக்கான ஊழியர்களிடையே பிளவைதான் உண்டாக்க முடிந்தது.

அதுவரை வடவெல்லைப் பாதுகாப்பு கமிட்டிக்குத் தலைவராக இருந்த விநயகத்திடம்—பேரம் பேசினர்—யாருக்கும் தெரியாமல் திடீர் தலைவரானர் ம. பொ. சி.

திட்டம் தீட்டினர் தி. மு. கவை ஒழிக்க எப்படி போராட்டத்தில் தி. மு. க. வினர் கலந்துகொள்ள வேண்டும்—ஆனல், தன்னை தி. மு. க. வினர் என்று சொல்லக் கூடாது தமிழனென்று சொல்லவேண்டும். நடக்கும் பொதுக் கூட்டங்களுக்கு தி. மு. க. வினரை அழைக்கக் கூடாது என்ற பல திட்டங்கள் தீட்டினர். இந்தத் திட்டத்திற்கு விநயகம் ஆக்கந் தந்தார். அன்றுவரை தி. மு. க. வினரைப் போற்றி துதிபாடிய அவர் தூற்ற தலைப்பட்டார். அவர்தான் "ஜோக்கர்" ஆயிற்றே எப்படியும் எதிலேயும் சேருபவராக யிருந்தார்.

தானே (ம. பொ. சி.) கேட்டு தலைவரானதற்குக் காரணம்—இல்லாமலுமில்லை. காங்கிரஸில் செல்லாக் காசாக ஆகி வந்த நேரம், தமிழரசுக் கழகம் கலைக்கப்பட வேண்டும் என்று மேலிடத்திலிருந்து தாக்கீது பிறப்பித்த நேரம், எப்படியாவது இந்தப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டால் அல்லது விளம்பரம் செய்து கொண்டால் தன்னை எதிர்க்கும் காங்கிரஸ்காரர்களை பயமுறுத்தவும், சொந்தப் பிரச்னை தீரவும் பேருதவியாக இருக்கும் என்ற தப்பு கணக்கைப் போட்டு தலைவர் பதவியை கேட்டு வாங்கினர் என்ற சேதி யாவரும் அறிந்ததுதான். ஆனல், அவர் போட்ட கணக்கு பொய்த்துவிட்டதே என்பதற்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேம்.

## மறியல் விஸ்தரிப்பு

திருத்தணியில் மட்டும் மறியல் நடந்தால் போதாது, மறியலை மேலும் பல ஊர்களுக்கு விஸ்தரிக்க வேண்டு மென்று சித்தூருக்கும், புத்தூருக்கும் மறியல் விஸ்தரிக்கப் பட்டது.

தி. மு. க. தோழர் A. முனுசாமியைத் தலைவராகக் கொண்ட மறியல் படை புத்தூருக்கு அனுப்பப்பட்டது. இவரைப்பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. மிஸ்டர் மாநிலத்தின் ஏடான செங்கோல் என்ற வார இதழ் 21-6-53-ம் தேதி 1-வது பக்கம் சித்தூர் போர் முனை வீரர்கள் என்ற தலைப்பில் புகைப் படத்துடன் வெளியிட் டுள்ள செய்தியை கீழே தருகின்றேன். தானே எழுதிவிட் டதை மறந்து பேசும் மரமண்டைகள் இதனை படிக்கட்டும்.

## திரு. A. முனுசாமி

"திரு. A. முனுசாமி என்ற இளைஞர் மறியல் தொண் டர்களில் மகா உற்சாக முடையவர். சித்தூர் தமிழர்களின் கோரிக்கைகளை கோஷங்களாக்கி குரல் கொடுப்பதில் அவ ருக்கிணை அவரேதான். அரசாங்கமே! பெல்லாரியைப் போல் செய்ய வேண்டுமோ என்று ஆவேசத்தோடு அவர் கோஷிக்கும்போது, மறியல் களத்தில் நிற்கும் போலீஸ் அதிகாரிகள் கூட மிரண்டுபோய் விடுவார்கள். அடுத்த மூச் சிலேயே—பெல்லாரியை பின் பற்றுமலேயே திருப்பதியை அடைந்தே தீருவோம் என்று மறு குரல் கொடுத்தப் பிறகுதான் அதிகாரிகளுக்கு நிம்மதி ஏற்படும். இவர் புத் தூர் களத்திலும் சில நாட்கள் பங்கு கொண்டிருக்கிறார்.

## தோழர் N. A. ரசீத்

தோழர் N. A. ரசீத் சித்தூர் போர்ப் படைக்குத் தலைவராக அனுப்பப்பட்டார். தோழர் ரசீத் என்றாலே சித் தூர் மாவட்டத்தில் சிறு கிராமம் முதல் சிங்கார நகரம் வரை அவரை அறியாதார் யாருமில்லை. முதன் முதலில்

சித்தூர் மாவட்டத்திலே தி. மு. க. வின் கொள்கையைப் பரப்பிய-கொள்கை உரம் பெற்ற இளைஞர்யாரும் துணிந்து செய்ய முடியாத சிறிய வேலைகளை சித்தூர் தமிழ்ப் பகுதி களில், செய்துமுடித்த,செய்த வீரர்-ஏழைதான், ஆனல் எஃ குள்ளம் படைத்தவர். எல்லோராலும் நன்கு மதிக்கப் படும் நண்பர். நமக்கு கிடைத்த நல் முத்து. தோழர் ரசீத் பேச் சுக்கு தணிகையில் தனி மதிப்புண்டு. இவரைப் பற்றி நாம் கூறினல் அதிகமென நினைக்கலாம், ஆனல், ம. பொ. சி. கூறியிருக்கிருர். 21—6—53 செங்கோல் இதழில் முதல் பக்கத்தில் புகைப் படத்துடன் வந்த செய்தி. சித்தூர்



**ஏ. எல். சி. கிருட்ணன் தலைமையில் சென்ற 200 தொண்டர்களை விநாயகம் வரவேற்று மாலை அணிவித்தல்.**

போராட்டத்தில் தி. மு. க. வினர் கலந்து கொள்ள வில்லை என்று பேசும் சிறுமதியாளர்களுக்கு அவர் எழுதிய ஏட்டை சற்று திரும்பி பார்க் கட்டும், திருந்தட்டும்.

செங்கோலில் வந்த செய்தியை அப்படியே தருகின் றேன்.

**"திரு. N. A. ரசீத்:**

திருத்தணியில் குறிப்பிடத் தக்கவர். **இவர் தி. மு. க. வைச் சேர்ந்தவர்.** என்ருலும், தமிழரென்ற ஒரே உணர்ச்சி

யுடன் தணிகை போர் முனையில் கலந்திருக்கிறார். வெறும் ஆரவாரங்களில் மட்டுமல்லாமல், அமைப்பு வேலைகளிலும் திறமை யுடையவர். கட்சி வேற்றுமைகளை மறந்து எல்லாரோடும் சகோதர மனப்பான்மையில் பழகுபவர். தணிகை போராட்டத்தில் நண்பர் ரசீதுக்கு உள்ள இடம் தனியானது."

திருததணியில் தோழர்கள் ஆறுமுகம், வேணு, நடராசன், சாமிநாதன், ரஹீம், வெங்கடசாமி, கண்ணன், நாராயணசாமி (திருத்தணி தி. மு. க. செயலாளர்) மறியல் செய்து அடக்கு முறைக்கு ஆளானார்கள்.

இத்தகைய வீரர்களின் உழைப்பைத்தான் இன்று வீணர்கள் குறை கூறுகின்றார்கள்.

## காட்டிக் கொடுத்தத் தலைவர்

வீரத்தைப் பற்றி வாய் வலிக்கப் பேசிய ம. பொ. சி. தான், தொண்டர்கள் மாற்றார்களால் அடிபடும் போது, தான் தப்பினால் போதும் என்று இரவோடு இரவாக ஓடி வந்து விட்டார். 23—5—53-ந் தேதி புத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சி யொன்று என் நினைவிற்கு வருகிறது. திருத்தணி போராட்டத்தில் எப்படி நடந்து கொண்டார் என்பதை ஊன்றிப் படித்துப் பார்ப்பவர்களுக்கு இவரின் துரோகச் செயல் நன்கு விளங்கும். இதை இன்று குறிப்பிட வில்லை. "ம. பொ. சி. க்கு மறுப்பு என்ற தலைப்பில்" 19—6—53-ல் "திராவிடனில்" ஒரு அறிக்கை கொடுத்திருந்தேன். இச் செய்தி நமது வார இதழ்களிலும் வெளியாகியுள்ளது. இதை இந்த இடத்தில் குறிப்பிடுவது மிகவும் அவசியம் என்பதால் 19—6—53 "திராவிடன்" வார இதழில் வெளிவந்த செய்தியை வெளியிடுகின்றேன்.

ம. பொ. சிவஞான கிராமணியாருக்கு மறுப்பு:

திருத் தணியில் குருதி கொட்டுவது தி. மு. க. கும் மாளமடிப்பது தமிழரசு கழகமா? தலை கொடுத்து தமிழ

கத்தைக் காக்கும் தன்மானமுள்ள தமிழன் ஏன் தலையோடு சென்னை சென்று விட்டார். புத்தூரில் ம. பொ. சி. யின் அந்தர் பல்டி!!!

சித்தூர், புத்தூர், திருத்தணி உள்ளடங்கிய தமிழ் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று தோழர் கே. விநயகம் M. L. A. அவர்களால் கடந்த 3-மாத காலமாக சாத்வீக மறியல், அரசியல் அலுவலகத்தின் முன் நடந்து வந்தது யாவரும் அறிந்ததே. அந்த போராட்டத்தில் தி. மு. க. மாநில மாநாட்டு [14, 15, 16, 17-12-51] தீர்மானம் 5-ன் படி மொழிவழி மாகாணங்கள் பிரியும் போது சித்தூர், திருத்தணி, தமிழ் பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தின்படி தி. மு. க. தன் முழு ஆதரவை வடவெல்லை பாதுகாப்புக் கமிட்டியினருக்கு கொடுத்து வந்தது.

திருத்தணி போராட்டத்தில் திருத்தணி தி. மு. க. தோழர்கள் நாள் தோறும் மறியல் செய்து வந்தார்கள்.

8-மைல் தூரத்தை கால் நடையாக கொப்பளிக்கும் வெயிலில் சென்று காரிய மாற்றிய தி. மு. க. கர்ம வீரர்கள்.

திருத்தணி பிரச்னையில் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் உரிமையுண்டு என்று சொந்தம் பாராட்டி திருத்தணி தோர்ழகளுக்கு ஆதரவு காட்ட அடையாள மறியல் 16—4—53-ல் அரக்கோணத்திலிருந்து கால் நடையாக நானே தலைமை தாங்கி நடத்தி மறியல் செய்திருக்கின்றேன். அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் எனக்கும் என்னுடன் வந்த 200 தொண்டர்களுக்கும் தோழர் கே. விநயகம் அவர்கள் பாராட்டுரையில் கூறியது "காலை 7-மணிக்கு அரக்கோணத்தில் கால் நடையாக புறப்பட்டு மறியலில் கலந்து கொண்ட தி. மு. க. தோழர்களுக்கு என் நன்றி" என கூறுமளவுக்கு நடந்து கொண்ட தியாக உணர்ச்சி படைத்த நமது தோழர்களே.

## பஞ்சாயத்து போர்டு தேர்தல்

29—4—53 திருத்தணி பஞ்சாயத்து போர்டு தேர்தலில் நானும், நண்பர்கள் என். ஏ. ரசீத், சஞ்சீவி, தியாகராசன், விநயகம் சுமார் 15-நாட்கள் இரவு பகல் ஓயாமல் பிரசாரம். திருத்தணி ஆந்திரருக்கா—தமிழருக்கா என்ற அடிப்படை பிரச்னே வைத்தே பிரசாரம் செய்து 11-க்கு 10-பேர் தலைவர் ஸ்தானம் உள்பட வெற்றி பெற செய்தோம்.

## தி. மு. க. விநயகம் பாராட்டு

30—4—53 மாலை சுமார் 10,000 மக்கள் கூடியிருந்த பொதுக் கூட்டத்தில் கே. வி. அவர்கள் பேசும் போது "இன்றைய தமிழர்களின் அமோக வெற்றிக்குக் காரணம் நான் மட்டுமல்ல—நமக்கு உறு துணையாக இருந்தவர்கள் வ. ஆ. மா. தி. மு. க. தோழர்களும் அதன் செயலாளர் ஏ. எல். சி. கிருட்ணசாமியும் ஆவார்கள் என்றும் அவர்கள் பணியை திருத்தணி மறக்காது என்று பேசினர்.

## போலிஸ் தடியடிக்கு ஆளானேம்

14—5—53-ந் தேதி நடந்த மறியலில் நானும், விநயகமும் முன்னின்று மறியல் நடத்தினேம். அன்று மறியல் மிக பரபரப்பாக யிருந்தது. அன்றுதான் போலிஸ் தன் அடக்குமுறையை அளவுகடந்து வீசியது. அன்றைய மறியலில் நாங்கள் போலிஸ் காரர்களால் தாக்கப்பட்டோம். தி. மு. க. செயற்குழு உறுப்பினர் சம்மந்தன் மண்டை உடைந்து குருதிகொட்டியது.

அன்றைய நிகழ்ச்சியில் பலத்த காயமடைந்தவர்கள் திருத்தணி தி. மு. க. உறுப்பினர்கள் ஐவர் காயமடைந்த சம்மந்தனை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அன்று மாலை கூட்டத்தில் தோழர் K. V. என்னையும், அடிபட்ட தி. மு. க. தோழர்களையும் பாராட்டிப் பேசினர். —மறியல் ஆரம்பித்த நாள்முதல் தோழர் K. V. யுடன்

தி. மு. க. தோழர்கள் தான் எல்லாவித அடக்குமுறைக்கும் ஆளாகி யிருக்கிறார்களே தவிர தலைகொடுக்கும் தமிழ் குஞ்சுகளோ, மறத்தமிழர் ம. பொ. சியோ, சரீப்புகளோ, வானம்பாடிகளோ—வெளவால்களோ வரவில்லை அன்று வரை—ஏன் இன்றுவரை கூட திருத்தணியை திரும்பி பாராதவர்கள் தான் (2 நாட்கள் ம. பொ. சி. வந்ததைத் தவிர)

இப்பொழுது கூறட்டும் நேர்மையுள்ள தமிழனாக யிருந்தால் சித்தூர் போராட்டத்தில் பங்குகொள்வது தமிழரசு கழகமா? தி. மு. கழகமா? என்று.



**கைது செய்த பிறகு தோழர்களின் பரபரப்பு.**

6—6—53-ந் தேதி சேலத்தில் நடந்த தமிழரசு கழக மாநாட்டில் கிராமணியாரின் கோஷ்டியில் சிலர் பேசியதாக சு. மி. பத்திரிகையில் வெளிவந்த செய்தி—சித்தூர் போராட்டத்தை தமிழரசு கழகம் நடத்தி வருகிறது என்றும் இதற்கு தி. மு. க. ஆதரவு தருவதில்லை யென்றும் அவர்களுக்கு டால்மியாபுரம் போராட்டம்தான் மிக முக்கியம் என கேலி பேசியிருக்கிறார்கள். இதைப் பார்த்ததும் நான் பரிதாபப்பட்டேன். இவர்களின் ஈனத்தனத்தைக் கண்டு ஏன்? ஒரு அரசியல் கட்சி குருதி கொட்டி பெற்ற தியாக முத்திரையை

தான் செய்ததாக கூறி—தன் கட்சியை வளர்க்கவேண்டிய இழி நிலை தமிழரசுக் கழகக்காரருக்கு வந்ததே என்று.

நான் சவால்விடுகிறேன் கிராமணியாருக்கு. நெஞ்சிலே கைவைத்து பதில் கூறட்டும். தமிழரசு கழகம் துவக்கியது திருததணி போராட்டம் என்று சேலத்திலே கூறினராம். திருத்தணியிலே தமிழரசுக் கழகம் இருக்கிறதா? அல்லது 144 தடையுத்திரவு போட்டு தடியடிப் பிரயோகம் செய்து அதன் மூலம் 50 பேர்களின் ரத்தத்தை ருசிபார்த்த அந்த புத்தூரில்தான் இருக்கிறதா தமிழரசு கழகம்? எங்கே யிருக்கிறது உனது தமிழரசு கழகம்?

சித்தூரிலும், புத்தூரிலும் மறியல் செய்து மண்டை உடைத்துக் கொண்டவர் யார்? 1 வாரம் சித்தூரில் முகாம் செய்து கலெக்டர் ஆபீஸ் முன் மறியல்செய்து அடக்கு முறைக்கு ஆளானவர் வ. ஆ. மா. தி. மு. க. பிரதிநிதி N. A. ரசீதுதானே? புத்தூரில் மறியல் செய்தவர் திருத்தணி தி. மு. க. மாவட்ட பிரதிநிதி A. முனுசாமி அல்லவா? திருத் தணியில் மறியல் செய்தவர்கள் திருத்தணி தி. மு. க. செயலாளர் உள்பட ஆறுமுகம், சம்மந்தன் ஆகியவர்கள் தானே? இதற்கு என்ன பதில் கூறுவார்கள் பொறுப்பில்லாமல் பொய் பிரசாரம் செய்யும் தமிழரசு கழகத்தார்! சேலத்தில் பேசியது தவறு என்று மறுப்பு விடுவாரா ம. பொ. சி? அல்லது தமிழரசு கழகம் யோக்யதை இதுதான் என்று மக்களுக்கு நமது மேடையில் நம்மை பேசவிடப் போகிறுரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

23—4—53-ந் தேதி பொதுச் செயலாளர் அண்ணு அவர்கள் திருத்தணி சென்று மறியல் தொண்டர்களை நேரில் பார்த்து—தன் முழு ஆதரவு உண்டு என்று K. V. அவர்களுக்கு கூறிவந்திருக்கிருர். அண்ணு அவர்களிடம் தி. மு. க. தோழர்களின் முழு ஆதரவு கிடைத்தது குறித்து தன் திருப்பதியை K. V. தெரிவித்திருக்கிருர். 1—5—53 சென்னை கடற்கரையில் நடந்த மே தின பொதுக்கூட்டத்தில் அண்ணு அவர்களின் முன்னிலையில் K. V. பேசுகை

யில் வ. ஆ. மா. தி. மு. க. ஆதரவும்தான், தன் போராட்டத்திற்கு இருந்து வந்திருக்கிறது என்று கூறி யிருக்கிருர்.

. . ம. பொ. சியும் இவரின் சிஷ்ய கோடிகளும் பேசி வருகிருர்கள் தமிழரசு தொடுத்திருக்கும் சித்தூர் போராட்டத்தில் தி. மு. க. கலக்காது அவர்கள் "தமிழ் நாட்டின் துரோ



தோழர் வி. ஆறுமுகம

கிகள்" என்று. நான் கேட்கிறேன் கன்னித்தமிழ் வழிவந்தவா என சொல்லிக்கொள்ளும் ம. பொ. சி. யை. 23—5—53 புத்தூரில் தடியடிப் பிரயோகம் செய்து நூற்றுக் கணக்கான தமிழர்கள் (பெரும்பாலும் தி. மு. க.) அடிபட்டு ரத்தம் கசிய மேடையருகே வந்தபோது நாம் நமது தொண்டர்களை

இன்னும் அடிபட விடக்கூடாது—ஆதரவு வார்த்தை கூறி, அமைதியை நிலைநாட்டி—கூட்டத்தை நல்ல விதத்தில் முடிக்க வேண்டுமென்று கிராமணியாரிடத்தில் கூறிய தி. மு. க. வினர் தமிழ்நாட்டுத் துரோகிகளா? அல்லது யார் எப்படி போனாலும் கவலையில்லை நாங்கள் தலைவர்கள் எங்களுக்கு போலிஸ் பாதுகாப்பு வேண்டும் என்று வெட்க மின்றி, போலிஸ் அதிகாரிகள் தயவை நாடி அன்று மாலையே ஆந்திர கம்யூனிஸ்ட்டுகளுக்கும்—நமக்கும் கலவரம் ஏற்பட்டு அதன் விளைவாய் எண்ணற்ற நமது தோழர்கள் அடிபட்டுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில்—எந்த விதமான ஆதரவான வார்த்தையும் தொண்டர்களுக்குக் கூறாமல் தான் தப்பினால் போதும் என்று எண்ணி போலீஸ் வானில் திருத்தணி சென்றுவிட்ட சுயநலத் தலைவர் ம. பொ. சி. தமிழ் நாட்டின் துரோகியா? பதவிக்காக பல்லிளித்துக் கொண்டு தன் லட்சியத்தை விட்டுக் கொடுக்கும் ஏன்? கேவலம் **M. L. C.** பதவிக்காக தன் கட்சி விதிகளை மாற்றிக் கொண்டு வடநாட்டு தலைவர்களின் தயவு நாடி தன் பதவியை காப்பாற்றிக் கொள்ளும் இழிநிலை தி. மு. க வினருக்கு என்று மிருந்த தில்லை.

வெளியூர்களில் சென்று சித்தூர் பிரச்னையின் ஏகத் தலைவன் என்று பறை சாற்றிக் கொள்ளும் இவர் இதுவரை சித்தூர் போராட்டத்திற்கு எத்தனை தொண்டர்களை அனுப்பினர் என கேட்கிறேன். கூறட்டும் பதில் ம. பொ.சி.

நாம் அண்மையில் தொடங்கியிருக்கும் எல்லைப்போர் ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்குமாக யிருக்காது, நிச்சயமாக யிருக்கவே யிருக்காது. ஆந்திரர்களும் திராவிடர்கள் என்பதால். நம்மை வேண்டுமென்றே ஒருவரோ டொருவர் மோதவிட்டு நம்மிடையே ஒற்றுமையை குலைக்க சதி செய்யும் வடநாட்டு சர்க்காரோடு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதற்கான வழி வகைகள் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தர இருக்கிறார். அதுவரையில் யார் எதைச் சொன்னாலும் கவலைப்படாமல் எதையும் தாங்கும்

இதயம் வேண்டும் என்று நம்மை நாமே தயார் செய்து கொண்டு இருப்போமாக!

வளரும் அரசியல் கட்சியை குறை கூறும் பிற்போக்கு கும்பல்கள் எல்லா நாட்டிலும் உண்டு. அது நம் தமிழ் நாட்டிற்கு மட்டும் விதி விலக்கா என்ன?

12—6—53

—மா. செயலாளர்.

### ஏக் தின் கா சுல்தான்!
### அவசர கோலத்தை அள்ளித் தெளித்த அதிபர்!!

திருத்தணியில் மட்டும் நடை பெற்று வந்த மறியல் ஓரளவிற்கு மக்கள் மனதை கவர்ந்து வந்தது. புதிய தலைவர் ஆயிற்றே மாற்றம் உண்டாக்க வேண்டுமே! அதனுல் தான் போலும் ஒரு இடத்தில் நடந்து வந்த உருப்படியான போராட்டத்தை விஸ்தரிப்பு என்ற பெயரால்—தொண்டர்களை அடிபட செய்து மங்களகரமாக, வீடு போய் சேர்ந்து விட்டார். போனவர் சும்மா போனுரா? இல்லை, போராட்டத்தை எடுத்துக் கொண்டே போய்விட்டார், வீரரில்லையா? அதனுல் தான் சித்தூர் போராட்டத்தை தன் சட்டைக்குள் போட்டுக் கொண்டு போய்விட்டார். சித்தூர் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது, அவசியமானுல் சென்னையில் மறியல் நடைபெறும் என்ற அறிக்கையை வெளியிட்டு விட்டு சென்றுவிட்டார்கள்—ஏன் சென்னைக்கு மாற்றப்பட்டது? மறியல் ஏன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என்ற ரகசியத்தை பிற் பகுதியில் விளக்குகின்றேன்.

### அரக்கோணம் பொதுக் குழு தீர்மானம்

இதற்கிடையில் அரக்கோணத்தில் 31-5-53 ல் தி. மு. க. வின் பொதுக் குழு கூடிற்று சித்தூர் பிரச்னைக்கான தீர்மானத்தை நிறைவேற்றி ஆவன செய்து வந்தது.

**பொதுக் குழு தீர்மானம் நெ. 6**

"மொழி வழி அரசு அமைப்பதற்காக தி. மு. க. மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி தமிழகத்திற்குச் சொந்தமான சித்தூர் மாவட்டத்தில் திருத்தணியில் நடத்தப்பட்டு வரும் அறப்போரில் சித்தூர், வ. ஆ. மாவட்ட தி. மு. க. தோழர்கள் தனது பங்கினை செய்தது கண்டு மகிழ்ந்து பாராட்டுவதுடன் மேற்கொண்டு அறப்போர் நடவடிக்கைகளை, கவனித்துக் கொள்வதற்கு முதற்படியாக சித்தூர், வடாற்காடு, சென்னை, செங்கற்பட்டு மாவட்டக் கிளைக் கழகங்களின் கருத்தையொட்டி தனிக் குழு அமைத்துக் கொடுக்கப் பொதுச் செயலாளருக்கு பொதுக் குழு அனுமதி அளிக்கிறது."

முன்மொழி:—**K. A.** மதியழகன்

வழிமொழி:—**A. L. C.** கிருட்ணசாமி

இந்த தீர்மானம் மிஸ்டர் மாநிலத்திற்கு பேரிடையை உண்டாக்கிற்று. ஏதோ திருத்தணி போராட்டம் தனக்கே உரியதைப் போலவும், மற்றவர்கள் இறங்கினால் தன் செல்வாக்கு குறைந்து விடும் என்றும் நினைத்திருந்தார்.

ம. பொ. சியும், விநாயகமும் பேசாத நாளிலேயே நாம் பேசி இருக்கிறோம் சித்தூரைப் பற்றி—தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கின்றோம். ஆம். 1951-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14, 15, 16, 17 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நிறைவேற்றியிருக்கும் சித்தூர் தீர்மானம் காமாலை கண்களுக்கு எப்படித் தெரியும் இது?

எங்கெங்கு தமிழர்கள், உரிமை யிழந்து வாழ்ந்தாலும் அவர்களுக்கு உறுதுணையாக யிருந்து இருக்கிறது நமது கழகம்.

சிங்களத்திலே சீரழிந்து கிடக்கும் தமிழர்களின், பர்மாவில் பரதவித்துக் கொண்டிருக்கும் தமிழர்களின், ஆப்பிரிக்காவில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களின்,

புதுவையிலே புழுக்களென வாழும் தமிழர்களின், நாஞ்சில் நாட்டில் நலிந்து வரும் தமிழர்களின் நல்வாழ்விற்காக பாடு பட்டு வரும் கழகம் அண்மையி லிருக்கும் சித்தூரில் சிக் குண்டு தவிக்கும் தமிழர்களுக்காக பரிந்து பேசுவதில் என்ன வியப்பிருக்க முடியும்?

நமது தூய கொள்கைகள் இப்படி யிருந்தும் நம் வளர்ச்சியைக் கண்டு பொறுமைப்பட்ட சிவஞானங்களும், சின்ன அண்ணாமலைகளும், நம்மைக் கேலி செய்தும் கிண் டல் செய்தும் வந்தார்கள்.

தி. மு. க. வினருக்கு சித்தூர் போராட்டம் முக்கிய மல்ல, டால்மியாபுரப் போராட்டமும், கல்வித் திட்டப் போராட்டமும் பெரிது என்று, நாம் ஏதோ சித்தூரைப் பற்றி கவலைப்படாதவர்கள் போலவும், இவர்கள்தான் சித் தூரின் ஏகத் தலைவர்கள் போலவும்—பேசி வந்தார்கள். இந்த நிலையில் எப்படி இவர் தலைமையில் தி. மு. க. பணி யாற்ற முடியும். உழைப்பை மதியாத, உலுத்தர்களின் கண் காணிப்பில் வேலை செய்ய எப்படி முடியும்? எனவே தான் நிலைமையை விளக்கி ம. பொ. சி. வடவெல்லை பாதுகாப்பு கமிட்டித் தலைவராக யிருக்கும்வரை தி. மு. க. வினர் அதில் கலந்து கொள்ள மாட்டார்களென்று முடிவு செய்த தில் என்ன தவறு இருக்க முடியும்?

இந்நிலைமையை விளக்கி K. விநாயகத்திற்கு கீழ் கண்ட கடிதத்தை 14-6-53-ல் எழுதினேன்.

**திரு. விநாயகம் M. L. A. அவர்கள் வடவெல்லை**
**பாதுகாப்புக் கமிட்டி திருத்தணி**

அன்புடையீர்,

வணக்கம். 31-5-53-ல் நடைபெற்ற பொதுக் குழு வில் சித்தூர், வட ஆற்காடு, சென்னை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டக் கிளைக் கழகங்கள் கூடி சித்தூர் பிரச்னையைப் பற்றி முடிவு செய்ய தீர்மானம் நிறைவேறி யிருப்பது தாங்

113493

கள் அறிந்ததே. தாங்கள் மறியல் ஆரம்பித்த நாள் முதல் தி. மு. க. தோழர்கள் தங்களுடனிருந்து பணியாற்றி இருக்கிறார்கள் என்பது தங்களுக்கு நன்கு தெரியும்,—ஆனால், அண்மையில் ம. பொ. சி. அவர்களும், அவரைச் சேர்ந்த தோழர்களும் சேலம் போன்ற பகுதிகளில் எங்கள் கழகம் சித்தூர் பிரச்னைக்கு ஆதரவு தரவில்லையென்றும், தமிழரசு கழகத்தாரால் துவக்கிய போராட்டந்தான் என்றும், தி. மு. க. வை கேலியாகவும், கேவலமாகவும் பேசி வருகிறார்கள், இந்த நிலையில் எப்படி தி. மு. க. வின் ஒத்துழைப்பு ம. பொ. சி. தலைவராக இருக்கும் வரையில் கிடைக்கும்? எனவே இதை நன்கு யோசித்து மீண்டும் கமிட்டியைக் கூட்டி பழையபடி தாங்களே தலைவராகவோ, திருவாளர்கள்: E. S. தியாகராசன், மங்கலங்கிழார் ஆகியவர்களோ தலைவரானால்—பழையபடி எங்கள் பூரண ஒத்துழைப்பு தங்களுக்கு உண்டு என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

தி. மு. க. நல்ல பணியாற்றி யிருக்கும்போது அதைப் பற்றி ம. பொ. சி. அவர்கள் புகழாவிட்டாலும், இகழாமலாவது இருந்திருக்கலா மல்லவா? இந்த நிலையில் ம. பொ. சி. தலைமையில் பணியாற்ற எங்கள் தோழர்கள் விரும்பவில்லை.

ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் வடவெல்லை பாதுகாப்புக் கமிட்டியின் தலைவரானதால்தான் மற்ற அரசியல் கட்சியின் உழைப்பை குறை கூற நேரிடுகிறது. எனவேதான்—எந்தக் கட்சியையும் சேராத நடு நிலைமையில் இருப்பவர்கள் தலைமையில் நாங்கள் ஒத்துழைக்க தயாராக இருக்கின்றோம்.

இதுதான் பொதுச் செயலாளர் அண்ணா அவர்களின் எண்ணமும் கூட.

அன்புள்ள

14-6-53 மாவட்டச் செயலாளர்.

## சித்தூர் போராட்டம் சென்னைக்கு மாற்றப்பட்டதேன்?

பெல்லாரி கன்னடியர்களுக்கு சேர வேண்டுமென்பதற்கு கிளர்ச்சி பெல்லாரியிலே நடந்தது, ஆந்திர பிரிவினைக்காக ஆந்திர நகரங்களில் கிளர்ச்சி நடந்தது. சித்தூர் தமிழ்ப் பகுதிகள் தமிழர்களுக்கு என்பதற்காக கிளர்ச்சி சித்தூர் பகுதியில் நடந்துவந்தது. இதுதான் முறையுங்கூட. ஆனால் சித்தூர் போராட்டத்தை சென்



ஆசிரியர் மங்கலங்கிழார்

னைக்கு மாற்றிவிட்டார்கள் மாபெருந் தலைவர்கள்! இதில் ரகசியம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா!

சொந்த நலத்திற்காக, சுக வாழ்விற்காக சித்தூர் மாவட்டத்திலுள்ள நாலரை லட்சத் தமிழர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள் கயவர்கள்.

தாக்கீதைக் காட்டி ம. பொ. சி. யையும், பதவியைக் காட்டி விநயகத்தையும் வீழ்த்தி விட்டார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்.

மாஜி திருமங்கலம் ஸ்தல-ஸ்தாபன மந்திரியானவுடன் அவர் வகித்துவந்த பார்லிமெண்டரி காரியதரிசி பதவி தனக்கு கிடைக்கும் என்று எண்ணி, ஆச்சாரியாரை அர்சித்தும் ஆகாத குலதர்ம கல்வித் திட்டத்தை பாராட்டியும், அவர் பின் சுற்றி வந்தார். பரிதாபம்! பரிதாபம்!! "அம்மிக் கல்லே ஆடிக் காற்றிலே பறக்கும்போது, இந்த ஆல இலேகளைப்பற்றி" சொல்லவா வேண்டும்! ஆதரவளித்த ஆச்சாரியாரே அரசியலில் அமங்கலியாய் விட்டபின், இந்த அறிவிலிகளுக்கு என்ன பயன்! பதவி ஆசை யாரை விட்டது! பதவி கிடைக்குமென்று, தி. மு. க. வைப் பற்றி திட்டிப் பார்த்தார். கல்வி திட்டத்தை ஆதரித்து ஆர்பரித்தார். என்றாலும் நரி திராட்சை கொலேக்கு ஆசைப் பட்ட கதையாகி, இன்று சீ! சீ! இந்தப் பதவி யாருக்கு வேண்டும் என்று மார் தட்டி பேசுகிறார் — பரிதாபத்துக் குரிய தோழர்..........

## நான்சென்ஸ் போராட்டம்:

சித்தூர் தமிழ் பகுதிகள் சென்னையோடு சேரவேண்டுமென்று திருத்தணியில் ரயில் நிறுத்தினோம், நான்சென்ஸ் என்றார் நேரு பண்டிதர், முன்னொருதடவை சொன்னார் மன்னித்தோம், மறந்தோம்! மீண்டும் சொன்னார் திருத்தணி போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் நமது ருமைத் தோழர்களே எல்லாம், சிறைக் கதவுகள் திறக்கப் பட்டு, சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டு அவர்தம் குடும்பங்களெல்லாம் ஆறாத் துயரத்தில் மூழ்கிக் கிடந்த நேரத்தில் ரயில்களை நிறுத்துவது **நான்சென்ஸ்** தனம் என்று. அவரின்

ஆணவத்தை அடக்கவும், நமது எதிர்ப்பைக் காட்டவும், நாம் ஜூலை மாதம் 15-ம் தேதி தென்னகத்திலே (தமிழ் நாடு) ஒரு நாள் முழுவதும் ரயில்களை நிறுத்தியபோது நம்மைப் பார்த்து விபீஷண விநயகங்களும் ம. பொ. சி.க் களும் மார்தட்டிக் கூறினார்கள், எங்களைத்தானே நேரு நான்சென்ஸ் என்று கூறினர் இதற்கு தி. மு. க. வினர் ஏன்? ரயில் நிறுத்த வேண்டுமென்று. இதோ நான் தரும் ஆதாரங்களை மறுக்க முடியுமா? என்று கேட்கிறேன்.




**போராட்டத்தில் கலந்துகொண்ட தோழர்கள்**

புறமுதுகு காட்டி ஓடிவிட்ட கோழைகளின் மறியல் மாற்ற துரோகச் செய்கையை தணிகைவாழ் மக்கள் புரிந்துக் கொண்டார்கள். இனிஇவர்களை (தமிழரசுக் கழகத்தை) நம்பி பயனில்லை பிரச்சினையை தீர்க்க நாம் நல்ல தோர் முடிவுகாண வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ரயிலை நிறுத்துவது என்று திருத்தணி தமிழ் மக்கள் முடிவு செய்தார்கள்—இதற்கு திருத்தணியிலுள்ள நமது

கழகத் தோழர்கள் முழு ஆதரவு தந்து ஒத்துழைத்தார்கள். ஜூன் 20-ந் தேதி ரயில் நிறுத்துவதென்றும் தடை விதித்தால் மீறுவதென்றும் முடிவு செய்துத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டார்கள். அந்தத் துண்டு பிரசுரத்தையும். 1/16 அளவில் அச்சடித்து மக்களின் ஆதரவைக் கோரி வெளியிட்டு விளம்பரப் படுத்தி இருந்தனர். அத்துண்டு பிரசுரத்தையும் கீழே தந்துள்ளேன். அதில் தமிழரசுக் கழகமோ அல்லது விநயகமோ துவக்கியதாக இருக்கிறதா என்பதை வாசகர்களைக் கவனிக்க வேண்டுகிறேன்.

## துண்டுப் பிரசுரம்

மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் திருத்தணி தமிழர்களின் கோரிக்கை!

சித்தூர் மாவட்ட தமிழ்ப் பகுதிகளுக்கு ஆந்திரப் பிரிவினைக்கு முன், எல்லைக் கமிஷன் தேவை!

திருத்தணி தாலுக்காவை எஞ்சிய சென்னை மாகணத்தோடு சேர்த்து விடு.

20—6—53 முதல் போர்முறையும், முனையும் மாறி விட்டது! தமிழர்களே புறப்படுங்கள் போருக்கு!

இன்னனம்,
தணிகை வட்டத் தமிழர்கள்.

---

ஸ்ரீ குமரன் அச்சகம் திருத்தணி

என்பதுதான் அந்த கோரிக்கை. எங்கே இருக்கிறது இந்தப் போராட்டத்தைத் துவக்கியது ம. பொ. சி. என்றோ! விநயகம்பதவி வகித்து வந்தவடவெல்லைக் கமிட்டிஎன்றோ?

## 144 தடை உத்திரவு

தமிழர்களின் புதியமுகாம் முதன் முதலில் 20-6-53ல் திருத்தணியில் ரயிலை நிறுத்தினார்கள், ஆர்ப்பாட்டங்கள் பல நடந்தன, நிலமை கட்டுக்கடங்காமல் போகவே, 144 தடை உத்திரவு நகர்எங்கும்பிறப்பிக்கப்பட்டது. அதைஒட்டி **N. A.** ரசீத்—**A**. முனுசாமி இருவரும் திருத்தணி தாலுகாவிலேயே பேசக்கூடாது, வரக்கூடாது என்றும் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது. என்பதையும் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

நன்ருக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். திருத்தணியில் முதன் முதலில் தடையுத்திரவு பிறப்பித்தும், ரயிலை நிறுத்தியதும் ஜூன் 20 ஆனல், அதே 20ந் திகதி தான் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள விநயகம் வீட்டில் வடவெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் செயற்குழுக்கூட்டம் சித்தூர் போராட்டம் எப்படி எங்கு? என்று நடத்துவது என்பதை பரிசீலிக்க, திருத்தணியில் நடக்கும் கிளர்ச்சிக்கும், இவர்கள் கூடும் கூட்டத்திற்கும் எப்படி சம்பந்தமிருக்கமுடியும்? இது ஒன்றேபோதும். இவர்களுக்கும் (ம. பொ. சி. விநயகம்) திருத்தணியில் ரயில் நிறுத்தியதற்கும் யாதொரு தொடர்பும் இல்லைஎன்றுகாட்டுவதற்கு.

## தி. மு. க. வினர் கைது

நகரில் தடை உத்திரவு விதித்திருந்த போதிலும் தடையை மீறி 21-6-53ந் தேதி காலை 9.10 மணிக்கு திருத்தணி வந்த பம்பாய் எக்ஸ்பிரஸ் வண்டியை அபாயச் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தினர்கள். இதில் முக்கியப் பங்கு ஏற்று முன்னின்று நடத்தி கைது செய்யப்பட்ட தோழர்கள் **N. A.** ரசீத், **A.** முனுசாமி, **R. M.** சம்மந்தம்,

நடராசன், R. சாமிநாதன் இன்னும்பலர் தி. மு. க. வினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட தோழர்கள் 15 நாள் ரிமாண்டில் திருப்பதி சப் ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இத்தனை அமளியும் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் திட்டம் தீட்டுகிறார்களாம் சென்னையிலே, எப்படி இருக்கும் இவர்களின் திட்டம். எண்ணிப் பாருங்கள், ஜூன் 21 முதல் ஜூலை 2ந் தேதி வரையில் நாள்தோறும் கட்சி சார்பற்ற தமிழர்கள் சிறைசென்ற வண்ணமிருந்தார்கள்.

## மா. பொ. சி. சிறை நாடகம்

பத்து நாட்களுக்கு மேலாக தடையைமீறி மக்கள் சிறைசென்ற வண்ணமிருந்தனர். இந்த நிலைக்குப்பிறகும் சிவஞானத்தால் சும்மாயிருக்க முடியவில்லை. தானும் சிறை செல்ல வேண்டுமென்று திட்டமிட்டார். அதுவரையில் சிறை சென்றவர்களில் பெரும்பாலோர் தி.மு. க. வினர் மட்டுமே, இந்தக் கிளர்ச்சி யிலிறங்கினார்கள் என்று மக்கள் கூறுவதோடு மட்டுமல்லாமல், இவர்கள் (தமிழரசுக் கழகத்தார்) ஈடுபடவில்லை என்ற இழிச் சொல்லும் ஏளனமும் பிறக்கும், பிறகு தன்னை யாரும் மதிக்கமாட்டார்கள் என்று கருதி தானும் தடையை மீறுவதாகக் கூறி 3—7—53-ல் சிறை சென்றார். ம. பொ. சி.

சிறைசென்ற ம. பொ. சி. தமிழரசு கழகத்தவராயிற்றே என்று நாம் சும்மா இருந்துவிடவில்லை தி. மு. க. வின் எழிலேடான நம் நாடு பத்திரிகையில், அந்தோ சிவஞானம் சிறைப்பட்டார்—என்று பாராட்டித் தலையங்கம் தீட்டி இருக்கின்றோம்.

3—7—53-ந் தேதி காலே 10 மணிக்குக் கைது செய்து பாதுகாப்பில் வைக்கப்பட்ட ம. பொ. சி. 6—7—53 மாலே 5 மணிக்கெல்லாம் விடுதலே செய்யப்பட்டார். மறியலும் நிறுத்தப்பட்டது விடுதலேயான மறுநாளே ஆரம்பித்துவிட்டார் தி. மு. க. வினரைத் தாக்கிப்பேச நம்மைத் தாக்குவதற்கென்றே தியாகமென்ற தனி முத்திரை பெறுவதற்குத்தானே 3 நாள் சிறை சென்ருர் என்றுகூட எண்ண வேண்டி இருக்கிறது—தோள்தட்டிப் பேசும் சோற்றுத் துருத்திகள் மறுக்கமுடியுமா இதனே? திருத்தணியிலே திக்கிழந்து, பொதட்டூர் பேட்டையிலே பொலிவிழந்து, செங்கல்பட்டிலே செல்வாக் கிழந்து, சென்னேயிலே சிறப்பிழந்துச் செல்லாக் காசான விநயகம் தான் இன்று கனம்களின் தயவை நாடி திண்டிவனம் சென்று திட்டி பார்க்கிருர், இல்லே கக்குகின்ருர். இல்லே விபூதி வீரமுத்துவின் வழியைப் பின் பற்றுகிருர். வீரமுத்துவின் விலாசம் தெரியாத நிலே நண்பர் விநயகத்திற்கு ஏற்படக் கூடாதே என்று பரிதாபப் படுகின்ருேம்.

மேடைக்கிடைக்காத விநயகம், கனதனவான்கள் கூடிஷ கூட்டங்களுக்கு வலியச் சென்று திராவிட இயக்கத்தவரைத் திட்டிப் பார்க்கிருர்—இந்த தீச் செயலுக்கு சிலர் தட்டிக் கொடுக்க வேண்டாம். என்று கூறுகின்ருேம். தட்டிக் கொடுக்கும் கரங்கள் தி. மு. க. வீசும் பிரசாரம் என்ற வாளுக்கு இரையாகும் என்று எச்சரிக்கின்றேன். விநயகம் விதண்டாவாதம் பேசினுலும், ம. பொ. சி. மறுப்புக் கூறினுலும் நாம் கவலேப்படப் போவது மில்லே, கவலேப்பட்டது மில்லே நம்முடைய வேலேயைத் தொடர்ந்து நாம் செய்து கொண்டே இருப்போம்.

## திருச்சி பொதுக் குழு

சித்தூர் பிரச்சினையில் நல்லதோர் முடிவு காணவும் அதற்கான வழிவகைகள் செய்யவும் தி. மு. க. தலைமை நிலையம் பொறுப்பேற்று, அதற்கான ஒரு குழுவையும், போர் பல கண்ட புலி நிகர்த் தீரரும் திராவிடன் வாரத் தாள் ஆசிரியருமான தோழர் **N. V.** நடராசன் அவர்களைத் தலைவராகவும், அதில் அங்கத்தினர்களாகச் செங்கல்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளரும் முன்னணி வீரருமான அருமை நண்பர் அண்ணாமலை, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாரும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறா கண்ணபிரான், A. L. C. கிருட்டிணசாமி மற்றும் பலரைக் கொண்ட இணைப்புக் குழு ஒன்று 7-2-54 ல் கூடிய திருச்சிப் பொதுக் குழுவில் அமைத்து அதற்கானவன செய்து வருகிறது என்பது யாவரு மறிந்ததே.

கோரிக்கை வெற்றிபெற இணைப்புக் குழு—சித்தூர் பகுதிகளில் சுற்றி வருகிறார்கள். அந்தக் குழுவிற்கு சித்தூர் வாழ் தமிழ் மக்கள் பேராதரவை நல்கி, வெற்றிபெற முனைந்து பாடுபட வேண்டுகின்றேன். இடையில் யார் எதைச் சொன்னாலும் எதையும் தாங்கும் இதயம் உண்டு என்று **அறிஞர் அண்ணா** அடிக்கடி கூறுவதைப் போல—இடுக்கண்களைத் தாங்கிக் கொண்டு எடுத்ததை முடிப்போமாக!

வணக்கம்.

# நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்புகள்

அரக்கோணத்தை அடுத்த மின்னல் என்னும் ஊரில், 1924-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் சின்னசாமி—ராஜம்மாள் தம்பதிகளுக்குப் பிறந்தவர்தான் **A. L. C. கிருட்ணசாமி.**

இவர் பள்ளியில் பயின்றுவரும்போதே சுயமரியாதை உணர்ச்சி பெற்று, 1940-ம் ஆண்டு முதல், சுயமரியாதைக் கொள்கைப்படி நடக்கலானார். இவர் திராவிடர் இயக்கத்தில் சேர்ந்து உழைப்பதற்கு முக்கிய காரணமானவர்கள், அவரது சகோதரர்களான ஏ. எல். சி. சஞ்சீவியும், பக்தவத்தலும் முதலியோர்.

இவர், 1947-ம் ஆண்டு ஆவடி ராணுவ தளவாடங்கள் சாலை (Civil Army) யில் வேலை பார்த்தபோது, அதே டிபோவின் பேரில் தி. க. வை ரிஜிஸ்டர் செய்து, செயலாளராகப் பணியாற்றி வந்தார். இதனால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ம் நாள் பெரியாரின் தலைமையில் சீர்திருத்தமணஞ் செய்துகொண்டார்.

1948-முதல், 1950-வரை நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும், பிராமணர் ஒட்டல் மறியல்களிலும் கலந்துகொண்டு அடக்கு முறைக்கு ஆளானார்.

திராவிட கழகம், திராவிட முன்னேற்ற கழகமாக பிரிந்ததிலிருந்து அதன் பொதுக் குழு உறுப்பினராக இருந்து வருகிறார். 1952-முதல் வ. ஆ. மாவட்ட தி. மு. க. செயலாளராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். இவர் உழைப்பால் முன்னுக்கு வந்தவர்.

1952-ல் 42-கிளைக் கழகங்களிருந்த வ. ஆ. மாவட்டத்தைத் தமது உழைப்பால் இப்போது 75-கிளைக் கழகங்களாக்கி யிருக்கிறார்.

அண்மையில் திருத்தணியில் போர்நடத்தி அதன்மூலம் தி. மு. க. கொள்கையை சித்தூர் மாவட்டத்தில் பரவச் செய்தார்.

ஆரம்ப கல்வி திட்டத்தை எதிர்த்து ஆச்சாரியார் வீட்டின்முன் மறியல் செய்து தடியடிபட்டு 40-நாள் சிறைத் தண்டனை பெற்றார். தலைவர்கள் சிறையிலிருந்த நேரம் ஆச்சாரியாருக்கும், கவர்னர் பிரகாசாவிற்கும கருப்புக்கொடி காட்டி கண்டனத்தை தெரிவித்து, அதன்மூலம் சிறை சென்றார். ரயில் நிறுத்த வழக்கில் ஈடுபட்டதால் பல கொடுமைகளுக்காளாகி சிறை சென்றார்.

தி. மு. க. முன்னணிவீரர்களில் இவரும் ஒருவர். இவரும் இயக்கப் பேச்சாளர்களில் ஒருவராவர். பல நாடகங்களில் நடித்து நற்புகழும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறார்.

இவர் அரக்கோணம் தாலூகா விவசாயிகள் சங்க செயலாளராகவும், அரக்கோணம் பெற்றோர் சங்க செயலாளராகவும், அரக்கோணம் தாலூகா மக்கள் மன்ற தலைவராகவு மிருந்து பணியாற்றி வருகிறார்.

இவரின் இடையறு பணிக்கு முக்கிய காரணம் இவரது சகோதரர்களான பக்தவத்தலும், சஞ்சீவியுமே யாகும்.

இன்னும் இயக்கப் பணியில் இவர் ஈடுபாடு கொண்டு நாட்டிற்கும், மொழிக்கும் பெருந்தொண்டு செய்வார் என்று நம்புகிறோம்.

ஸ்ரீ மகள் அச்சகம் சென்னை-1

கருத்துமணிக் குவியல்

கற்பனையின் ஊற்று

சிறுகதைச் சுரங்கம்

கவிதைச் சோலை

இவ்வளவும் தன்னுள் தாங்கி திராவிடத்தில் இன முழக்கத்தை எழுப்பும் குடும்பப் பத்திரிகை.

# கலைமன்றம்

ஆசிரியர் : பால்வண்ணன்

## மூவர்ண முகப்பு

## 40 பக்கங்கள் விலை 0-4-0

கலைமன்றம். P. B. No. 275. சென்னை—1.

## வீர வரலாறுகள்

**ஊடுருவி எழுதியவை:—**

| | | |
|---|---|---|
| வீரமங்கை ஜோன் | 1 | 0 |
| நெப்போலியன் | 1 | 0 |
| சீனத்துச் சிங்கம் (சன்யாட்சன்) | 1 | 0 |
| வால்டையர் | 1 | 0 |
| உலகைத் திருத்திய உத்தமர்கள் | 1 | 0 |
| ,, இரண்டாம் பாகம் | 1 | 0 |
| கலிங்கப் போர் | 1 | 0 |

**விருதை ந. இராமசாமி:—**

| | | |
|---|---|---|
| தாமஸ் மசாரிக் | 1 | 0 |

**மு. நமசிவாயம்:—**

| | | |
|---|---|---|
| அத்துக்குடி துப்பாக்கி பிரயோகம் | 0 | 8 |
| கல்வி திட்டப் போராட்டம் | 0 | 8 |
| டால்மியாபுரப் போராட்டம் | 0 | 8 |

# கலை மன்றம்

சென்னை-1.

கலைஞர் கருணாநிதியின்

## கருத்துக் குவியல்

| | | | |
|---|---|---|---|
| தூக்குமேடை | 1 | 8 | 0 |
| களத்தில் கருணாநிதி | 1 | 0 | 0 |
| பெருமூச்சு | 1 | 0 | 0 |
| சிந்தனை ஆழி | 1 | 0 | 0 |
| இரத்தச் சுவடு | 1 | 0 | 0 |
| புராண போதை | 1 | 0 | 0 |
| பலிபீடம் நோக்கி | 1 | 0 | 0 |
| இனமுழக்கம் | 1 | 0 | 0 |
| நச்சுக்கோப்பை | 0 | 12 | 0 |
| வாழமுடியாதவர்கள் | 0 | 12 | 0 |
| அறப்போர் | 0 | 8 | 0 |
| கருணாநிதியின் கருத்துரைகள் | 0 | 8 | 0 |
| கொலைக்களம் | 0 | 8 | 0 |
| பெரிய இடத்துப் பெண் | 0 | 8 | 0 |
| உணர்ச்சி மாலை | 0 | 8 | 0 |
| தப்பிவிட்டார்கள் | 0 | 8 | 0 |
| பராசக்தி [முழு வசனம் பாடல்] | 0 | 8 | 0 |
| பணம் ,, | 0 | 8 | 0 |
| நாம் ,, | 0 | 8 | 0 |
| மந்திரிகுமாரி ,, | 0 | 8 | 0 |
| மருதநாட்டு இளவரசி | 0 | 5 | 0 |
| தேவகி | 0 | 5 | 0 |

விபரங்களுக்கு:

**கலைமன்றம்**

த.பெ.எண். 275 — சென்னை-1